Date of Publication : First week of Every Month
Registered Newspaper in India No. 1103 /57



# கூட்டுறவு

டிசம்பர் – 2024




## மாநில கூட்டுறவு வங்கிகளின் தேசிய இணையத்தின்

# விருதுகள்

**தமிழ்நாடு முதலமைச்சர் வாழ்த்து**

விலை ரூ.20.00

C.C. BANK

நம்பகமான பாதுகாப்பு
நிலையான வளர்ச்சி

(Since 1930)

# சென்னை மத்திய கூட்டுறவு வங்கி

**215, பிரகாசம் சாலை, (பிராட்வே), சென்னை-600108.**

**தொலைபேசி எண் : 044-23458708 to 23458713 பேக்ஸ் :044-25381087**

Web : www.ccbankchennai.com Email : ccb_bank@yahoo.co.in

**சென்னை மாநகரில் 71 கிளைகள்**




- மைய வங்கியியல் சேவையுடன் கூடிய கிளைகள்
- ATM மற்றும் SMS வசதி
- RTGS / NEFT பணப் பரிமாற்ற வசதி
- 54 கிளைகள் குளிர்சாதனம் மற்றும் நவீன வசதிகளுடன்
- சுமார் 10,000 வாடிக்கையாளர்களுக்கு நேரடி சமையல் எரிவாயு மானியம்
- ரூ.500 கோடிக்கும் அதிகமான முதலீடு
- வைப்பீடுகளுக்கு கூடுதல் வட்டி
- ஆயுள்/ பொதுக் காப்பீடு சேவைகள்

**அனைத்துத் தரப்பினருக்குமான கடனுதவிகள்**

- வீடு அடமானக் கடன்கள் / வீட்டுவசதி கடன்கள்
- நகைக் கடன்கள் (பல்வேறு வட்டி விகிதங்களில்)
- மாற்றுத்திறனாளிகளுக்கு வட்டியில்லா கடன்கள்
- சிறுவணிகக் கடன்
- சம்பளக் கடன்
- சுய உதவிக் குழுக்களுக்கான கடன்

(IFS Code: TNSC0010500)



கூட்டுறவே !
புதியதோர் உலகம் செய்வோம் !
நாட்டுயர்வு !
89 ஆண்டுகளாக
வேளாண் பெருமக்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் சேவை அளித்துவரும் ஓர் ஒப்பற்ற கூட்டுறவு நிறுவனம்
உழவர்களின் உற்ற நண்பன்
திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம்
திருச்செங்கோடு-637 211.
வேளாண் பெருமக்களுக்கான சேவைகள்
பருத்தி ஏலம், கொங்கணாபுரம் கிளை
மஞ்சள் ஏலம், திருச்செங்கோடு.
தேங்காய் பருப்பு ஏலம், மல்லசமுத்திரம் கிளை
விவசாய விளைபொருட்கள் ஏல விற்பனை விபரம்
திருச்செங்கோடு | பருத்தி, எள், நிலக்கடலை | செவ்வாய்
தேங்காய் பருப்பு | வெள்ளி
மஞ்சள் | சனி
கொங்கணாபுரம் | பருத்தி, எள் | சனி
நிலக்கடலை | ஞாயிறு, திங்கள், புதன்
மல்லசமுத்திரம் | பருத்தி | புதன்
நிலக்கடலை, மக்காச்சோளம் | திங்கள், வெள்ளி
தேங்காய் பருப்பு | வெள்ளி
ஜலகண்டாபுரம் | தேங்காய் பருப்பு | செவ்வாய்
இதர சேவைகள்
TCMS சூப்பர்மார்க்கெட்
எண்ணெய் உற்பத்தி ஆலை
மஞ்சள் அரவை இயந்திரம்
அம்மா மருந்தகம்
நகைக்கடன் 9.25%
தானியங்கி உறையிடும் இயந்திரம்
இண்டேன்
Indane
IndianOil
Tiruchengode Agricultural Producers Co-operative Marketing Society Ltd.
Auto LPG
SERVO
சர்வோ ஆயில் பிரிவு சேலம்
சங்கத்தின் சொந்த தயாரிப்புகள்
அர்த்தனாரீஸ்வரா
TURMERIC POWDER
Groundnut Oil
விதைகள், உரங்கள் மற்றும் விவசாய உபகரணங்கள் விற்பனை
உயர்தரமான டாடா டிஸ்கான், JSW கம்பிகள் விற்பனை
தலைமையகம் திருச்செங்கோடு : 04288 - 252359, 250511
கொங்கணாபுரம் கிளை : 04283 - 265540, 265652
மல்லசமுத்திரம் கிளை : 04288 - 238425 சேலம் சர்வோ : 0427 - 2352323
என்றென்றும் மக்கள் சேவையில் உங்கள் TCMS
Email : tcmstcd@gmail.com

# கூட்டுறவு

மலர் : 97 ✦ டிசம்பர் : 2024 ✦ இதழ் : 9

**கூட்டுறவு இயக்கக் கொள்கை விளக்க இதழ்**

எல்லார்க்கும் எல்லாமே என்றே ஞாலம்
இலங்கிடவே கூட்டுறவு ஏற்ற பாதை
இல்லாமை இல்லாத வாழ்வு வேண்டின்
ஏற்றிடுவோம் கூட்டுறவு வெற்றிப் பாதை

ஆசிரியர்:

**ச.சுப்ரமணியன்,** பி.எஸ்.சி., எச்.டி.சி.எம்.,

தொலைபேசி : 2836 4864

மின்னஞ்சல் : tncupub03@gmail.com

இணையதளம்: www.tncu.tn.gov.in

**ஆயுள் சந்தா ரூ. 2000**
(பத்தாண்டுகளுக்கு)
**ஆண்டு சந்தா ரூ.210**
தனிப்பிரதி விலை ரூ.20

## விளம்பரக் கட்டணம்

பல வண்ணம் (ஓராண்டிற்கு)

| | | |
|---|---|---|
| அட்டை 4 ஆம் பக்கம் | ரூ. | 50,000 |
| அட்டை 2 & 3ஆம் பக்கம் | ரூ. | 40,000 |

உள்ளே கருப்பு–வெள்ளை (ஓராண்டிற்கு)

| | | |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ. | 24,000 |
| அரைப்பக்கம் | ரூ. | 12,000 |

உள்ளே கருப்பு–வெள்ளை (6 மாதங்களுக்கு)

| | | |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ. | 12,000 |
| அரைப்பக்கம் | ரூ. | 6,000 |

## இந்த இதழில்...

* மாநில கூட்டுறவு வங்கிகளின் தேசிய இணையத்தின் விருதுகள் வழங்கும் விழாவில், தமிழ்நாட்டின் கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கப்பட்ட ஐந்து விருதுகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் காண்பித்து வாழ்த்து — 5
* கூட்டுறவு சங்கங்களின் தயாரிப்புகள் மற்றும் சேவைகளுக்கு ஜிஎஸ்டி விலக்கு அளிக்கப்பட வேண்டும்: ஒன்றிய அமைச்சர் திரு.அமித்ஷாவிடம் கூட்டுறவுத்துறை அமைச்சர் கோரிக்கை மனு — 07
* மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் TUCS காமதேனு கூட்டுறவு அங்காடியில், ”கூட்டுறவு பொங்கல்” தொகுப்பு விற்பனையை துவக்கி வைத்தார்கள். — 08
* திண்டல்மலை நகர கூட்டுறவு சங்கத்தில் 2,171 பயனாளிகளுக்கு பல்வேறு கடனுதவிகளை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் வழங்கினார். — 12
* திண்டுக்கல் மாவட்டத்தில், 71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா. — 16
* நீலகிரி மாவட்டத்தில் 71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா. — 32
* ஈரோடு மாவட்டத்தில் 71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா. — 35
* விருதுநகர் மாவட்டத்தில் 71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா. — 39

# அட்டைப்படம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களிடம் 13.12.2024 அன்று தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்கள், புதுதில்லியில் நடைபெற்ற மாநில கூட்டுறவு வங்கிகளின் தேசிய இணையத்தின் விருதுகள் வழங்கும் விழாவில், தமிழ்நாட்டின் கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கப்பட்ட ஐந்து விருதுகளை காண்பித்து வாழ்த்து பெற்றார். இந்நிகழ்வில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன் இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் டாக்டர் ந.சுப்பையன் இ.ஆ.ப., கூடுதல் பதிவாளர்கள் மற்றும் கூட்டுறவுத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


கூட்டுறவே! **இராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிட்.,** நாட்டுயர்வு!

தபால் பெட்டி எண்.25, 265, E, வண்டிக்கார தெரு. இராமநாதபுரம்-623501.

✆ : 04567-221245 rdccbank@gmail.com www.rdccbankco.in

**தலைமையகம் உட்பட மாவட்டம் முழுவதும் 32 கிளைகளுடன் வாடிக்கையாளர் சேவையில் 104வது ஆண்டில் செயல்பட்டு வருகிறது.**

**இட்டு வைப்புகளுக்கான வட்டி விகிதம்**

| வ. எண். | விபரம் | சாதாரண மக்களுக்கு | மூத்த குடிமக்கள் |
|---|---|---|---|
| 1. | 31 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை | 5.50% | 5.50% |
| 2. | 46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை | 5.85% | 5.85% |
| 3. | 91 நாட்கள் முதல் 180 நாட்கள் வரை | 6.30% | 6.30% |
| 4. | 181 நாட்கள் முதல் 364 நாட்கள் வரை | 6.85% | 6.85% |
| 5. | 1 வருடத்திற்கு | 8.00% | 8.25% |
| 6. | மாற்றுத்திறனாளிகளுக்கு ஒரு வருடத்திற்கு | 8.25% | 8.50% |

நிறுவனங்கள் / கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பெறப்படும் பெரு இட்டு வைப்புகளுக்கு (Bulk Deposit) 1 வருடத்திற்கு ரூ. 5.00 கோடி மற்றும் அதற்கு மேல் 8.50% வட்டி வழங்கப்படுகிறது.

**கடன் வசதிகள்**

❁ குறைந்த வட்டியில் தனி நபர் நகைக்கடன் ❁ மகளிர் சுயஉதவிக்குழுக்கடன் ❁ மாற்றுத்திறனாளிகளுக்கு வட்டியில்லாக் கடன் ❁ நெசவாளர்களுக்கு மானியத்துடன் கூடிய முத்ரா கடன் ❁ ஆதரவற்ற விதவைகளுக்கு குறைந்த வட்டியில் கடன் ❁ வீடு கட்டும் மற்றும் வீட்டு அடமானக் கடன் (குறைந்த வட்டியில்) ❁ சிறுவணிகக்கடன், பணிபுரியும் மகளிர் கடன்

**வங்கிச் சேவைகள்**

❁ தனிநபர் பாதுகாப்பு பெட்டக வசதி ❁ விரைவு பண பரிவர்த்தனை சேவை (NEFT & RTGS) ❁ ATM மற்றும் நடமாடும் ATM வசதி ❁ Mobile Banking ❁ விவசாயிகளுக்கு KCC Rupay Card, POS மற்றும் Micro ATM மூலம் பணம் பட்டுவாடா வசதி ❁ LPG Gas சமையல் எரிவாயு மானியம் பெறும் வசதி ❁ தனிநபர் பாதுகாப்பு பெட்டக வசதி ❁ G Pay, Phone Pay, PayTM, UPI, IMPS, AEPS

**பிரதம மந்திரி ஜீவன் ஜோதி பீம யோஜனா (PMJBY) காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது**

இணைப்பதிவாளர் / மேலாண்மை இயக்குநர்

# மாநில கூட்டுறவு வங்கிகளின் தேசிய இணையத்தின் விருதுகள் வழங்கும் விழாவில்,

# தமிழ்நாட்டின் கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கப்பட்ட ஐந்து விருதுகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் காண்பித்து வாழ்த்து




**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களிடம் 13.12.2024 அன்று தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள், புதுதில்லியில் நடைபெற்ற மாநில கூட்டுறவு வங்கிகளின் தேசிய இணையத்தின் விருதுகள் வழங்கும் விழாவில், தமிழ்நாட்டின் கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கப்பட்ட ஐந்து விருதுகளை காண்பித்து வாழ்த்து பெற்றார்.**

மாநில கூட்டுறவு வங்கிகளின் தேசிய இணையம் (NAFSCOB), மாநில மற்றும் மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் செயல்பாடுகளை எளிதாக்குவதற்கும், குறிப்பாக கூட்டுறவுக் கடன்களை மேம்படுத்துவதற்கும் 19.5.1964 அன்று நிறுவப்பட்டது. இந்த இணையத்தில் இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலக் கூட்டுறவு வங்கிகளும் உறுப்பினர்களாக உள்ளன.

இந்த தேசிய இணையம் ஒவ்வொரு ஆண்டும் கூட்டுறவு அமைப்புகளின் கீழ் சிறப்பாக செயல்படும், தலைமை வங்கி, மாவட்ட மத்திய வங்கி, கூட்டுறவுக் கடன் சங்கங்கள் என செயல்படும் மூன்றடுக்கு




கூட்டுறவு வங்கிகள் மற்றும் தலைமை வங்கியின் கீழ் செயல்படும் தொடக்கக் கூட்டுறவு கடன் சங்கங்கள் என இரண்டடுக்கு முறையில் செயல்படும் கூட்டுறவு வங்கிகளுக்கு விருதுகளை வழங்கி வருகிறது.

இந்த அமைப்பு 1964 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 60 ஆண்டுகளைக் கடந்து வைரவிழா கொண்டாடும் தருணத்தில் விருது வழங்கும் விழாவினை 26.11.2024 அன்று புதுதில்லியில் நடத்தியது. 2022-23 மற்றும் 2023-24 ஆண்டுகளில் சிறப்பாக செயல்பட்ட வங்கிகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டது.

இந்த வைர விழா கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக நடைபெற்ற விருது வழங்கும் விழாவில், விருதினை மாண்புமிகு ஒன்றிய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.அமித் ஷா அவர்கள் வழங்கிட, தமிழ்நாடு கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கப்பட்ட ஐந்து விருதுகளை மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

இவ்விழாவில் தமிழ்நாட்டு கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கப்பட்ட ஐந்து விருதுகளின் விவரங்கள்: தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் நிதியுதவியுடன் நடத்தப்பட்டு வரும் விவசாயக் கூட்டுறவு பணியாளர் பயிற்சி நிலையத்திற்கு று2023-24ஆம் ஆண்டில் இந்திய அளவில் சிறந்த பயிற்சி நிலையமாக தேர்வு செய்யப்பட்டு முதல் பரிசு வழங்கப்பட்டது.

மூன்றடுக்கு கூட்டுறவுக் கடன் கட்டமைப்பில் 2022-23ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த சிறந்த செயல்பாட்டிற்கான மூன்றாம் பரிசு தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கிக்கு வழங்கப்பட்டது. குறுகிய கால கூட்டுறவுக் கடன் கட்டமைப்பில் 100 ஆண்டுகளுக்கும் மேலாக சிறந்த வங்கிச் சேவையினை வழங்கி வருவதற்காக தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கிக்கு சிறப்பு பரிசு வழங்கப்பட்டது. குறுகிய கால கூட்டுறவு கடன் கட்டமைப்பில் 100 ஆண்டுகளுக்கும் மேலாக சிறந்த வங்கிச் சேவையினை வழங்கி வருவதற்காக சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கு சிறப்பு பரிசு வழங்கப்பட்டது. மதுரை மாவட்டத்திலுள்ள பூண்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்திற்கு 2022-23ஆம் ஆண்டில் சிறந்த செயல்பாட்டிற்கான மூன்றாம் பரிசு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வின்போது, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன்.இ.ஆ.ப., கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் டாக்டர். ந. சுப்பையன். இ.ஆ.ப., மற்றும் கூட்டுறவுத்துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# கூட்டுறவு சங்கங்களின் தயாரிப்புகள் மற்றும் சேவைகளுக்கு ஜிஎஸ்டி விலக்கு அளிக்கப்பட வேண்டும்:



## அமித்ஷாவிடம் கூட்டுறவுத்துறை அமைச்சர் கோரிக்கை மனு


நபார்டு வழங்கும் சலுகை மறுநிதியளிப்பு, மாநிலத்தில் உள்ள கூட்டுறவுகளின் ஒட்டுமொத்த குறுகிய கால கடன் அளவிற்கேற்ப உயர்த்தி வழங்கப்பட வேண்டும். கூட்டுறவு சங்கங்களின் வருமான வரி (TDS) பிடித்தங்களிலிருந்து விலக்கு அளிக்கப்பட வேண்டும். (NCDC) மூலம் (ICDP) போன்ற திட்டங்கள் நியாயமான வட்டி விகிதத்தில் கூட்டுறவு சங்கங்களுக்கு கடன் வழங்க வேண்டும். கூட்டுறவு சங்கங்களின் தயாரிப்புகள் மற்றும் சேவைகளுக்கு ஜிஎஸ்டியில் இருந்து வருமானவரி செலுத்தவதிலுருந்து இருந்து விலக்கு அளிக்கப்பட வேண்டும் என கோரிக்கை மனுவை ஒன்றிய அமைச்சர் அவர்களிடம் அளித்துள்ளார்.

வித்யா லட்சுமி, சூர்யா கர், (MSME) திட்டங்கள் போன்ற பல்வேறு ஒன்றிய அரசு திட்டங்களின்கீழ் பயனாளிகளுக்கு கடன் வழங்க தகுதியான வங்கிகளின் பட்டியலில், கூட்டுறவு வங்கிகள் சேர்க்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும், 27 கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையங்களின் உள்கட்டமைப்பை சீரமைக்க இந்திய தேசிய கூட்டுறவு ஒன்றியத்துக்கு அனுப்பப்பட்ட ஏறத்தாழ ரூ. 124 கோடி முன்மொழிவை சாதகமாக பரிசீலிக்க வேண்டும், கேசிசி திட்டத்தின்கீழ் கடன்களை சொந்த நிதியிலிருந்து வழங்கும் வங்கிகளுக்கு 1.5% குறைக்கப்பட்ட வட்டி மானியத்தில் இருந்து 2% ஆக GOI ஆல் உயர்த்தி வழங்கப்பட வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். ஜெ.ராதாகிருஷ்ணன் உடனிருந்தார்.

# சென்னை, தேனாம்பேட்டை, TUCS காமதேனு கூட்டுறவு அங்காடியில், கூட்டுறவுத்துறையின் மூலம் "கூட்டுறவு பொங்கல் தொகுப்பினை"

## மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்.

**மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் 18.12.2024 அன்று சென்னை, தேனாம்பேட்டை, TUCS காமதேனு கூட்டுறவு அங்காடியில், கூட்டுறவுத்துறையின் மூலம் "கூட்டுறவு பொங்கல்" என்ற பெயரில் தமிழ்நாடு முழுவதும் நடைபெறவுள்ள பொங்கல் தொகுப்பு விற்பனையை துவக்கி வைத்தார்கள்.**






மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவிக்கையில் :
உழைக்கும் மக்கள் தமது உழைப்பிற்கு உதவிய இயற்கைக்கும், தம்மோடு சேர்ந்து உழைத்த தமது நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் வகையில், பழையன கழித்தல் புதியன புகுதல் வேண்டும் என்ற நம்பிக்கையில் போகிப்பண்டிகையில் தொடங்கி, தைப்பொங்கல், மாட்டுப்பொங்கல், காணும் பொங்கல் என பொங்கல் பண்டிகை நான்கு நாட்களுக்கு தமிழ் மக்களால் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. அத்தகைய பொங்கல் பண்டிகையை ஏழை, எளிய, நடுத்தர மக்கள் என அனைத்து தரப்பு மக்களும் சிறப்பாக கொண்டாடி மகிழ மாண்புமிகு தமிழ்நாடு **முதலமைச்சர்** அவர்களால் பல்வேறு முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின் படி, கூட்டுறவுத்துறையின் மூலம் நடத்தப்பட்டு வரும் கூட்டுறவு மொத்த விற்பனை

பண்டகச்சாலைகள், பிரதம கூட்டுறவு பண்டகச்சாலைகள், கூட்டுறவு விற்பனைச் சங்கம், சுயசேவை பிரிவுகள் மற்றும் சில்லறை விற்பனை நிலையங்கள் போன்ற அனைத்து விற்பனை அலகுகள் மூலம் தமிழ்நாடு முழுவதும் **"கூட்டுறவு பொங்கல்"** என்ற பெயரில் மளிகைப்பொருட்கள் அடங்கிய பொங்கல் தொகுப்பு விற்பனை நடைபெறவுள்ளது.

இந்த மளிகைப் பொருட்கள் அடங்கிய பொங்கல் தொகுப்பு, இனிப்பு பொங்கல் தொகுப்பு, கூட்டுறவு சிறப்பு பொங்கல் தொகுப்பு, பெரும் பொங்கல் தொகுப்பு என மூன்று வகையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**இனிப்பு பொங்கல் தொகுப்பு,**




*பச்சரிசி* (BPT 43) *500 கிராம், பாகுவெல்லம் 500 கிராம், ஏலக்காய் 5கிராம், முந்திரி 50 கிராம், ஆவின் நெய் 50 கிராம், பாசிபருப்பு 100 கிராம், உலர் திராட்சை 50 கிராம் என 7 பொருட்கள் அடங்கிய பொங்கல் தொகுப்பு, சிறிய பையுடன் ரூ.199/ என்ற விலையில் விற்பனை செய்யப்படவுள்ளது.*

**சிறப்பு பொங்கல் தொகுப்பு,**




*மஞ்சள் தூள்50 கிராம், சர்க்கரை 500 கிராம், துவரம் பருப்பு250 கிராம், கடலைப் பருப்பு100 கிராம், பாசிப் பருப்பு100 கிராம், உளுத்தம் பருப்பு250 கிராம், கூட்டுறவு உப்பு 1 கிலோ, நீட்டு மிளகாய்250 கிராம், தனியா250 கிராம், புளி250 கிராம், பொட்டுக்கடலை200 கிராம், மிளகாய் தூள்50 கிராம், செக்கு கடலை எண்ணெய் 1/2 லிட்டர், கடுகு 100 கிராம், சீரகம் 50 கிராம், மிளகு 25 கிராம், வெந்தயம் 100 கிராம், சோம்பு 50 கிராம், பெருங்காயம் 25 கிராம் என 19 பொருட்கள் அடங்கிய பொங்கல் தொகுப்பு, மளிகை பையுடன் ரூ.499/ என்ற விலையில் விற்பனை செய்யப்படவுள்ளது.*

சேமிக்க சிறந்த வங்கி ! 100 ஆண்டு பாரம்பரியமிக்க வங்கி !!

# புதுக்கோட்டை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிட்.,

புதுக்கோட்டை

அன்புடையீர் !

புதுக்கோட்டை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, புதுக்கோட்டை மாவட்டம் முழுவதும் 28 கிளைகளுடன் 102 ஆண்டுகளை கடந்து மக்கள் சேவை புரிந்து வருகிறது.

## எங்களது சிறப்பம்சங்கள்:-

★ மைய வங்கியியில் சேவை ★ UPI சேவை. ★ துரித பணப்பரிமாற்ற சேவை (RTGS/NEFT/IMPS)
★ ATM சேவை (ATM Debit Card / KCC Card) ★ குறுந்தகவல் சேவை (SMS)
★ செல்லிடை வங்கிச் சேவை (Mobile Banking) ★ தனிநபர் பாதுகாப்பு பெட்டக (Locker) வசதி
★ அரசின் அனைத்து மானியங்களும் பெறும் இணையதள வசதி.
★ அடமான நகைகளுக்கு முழு பாதுகாப்பு மற்றும் காப்பீடு வசதி

## விரைவு நகைக்கடன் சேவை

கிராம் ஒன்றுக்கு ரூ.4,000/-

➤ ஒரு நபருக்கு 20 இலட்சம் வரை மிகக்குறைந்த வட்டி விகிதம்.
➤ மிகக்குறைந்த நகை பரிசீலனை கட்டணம். ➤ கூட்டு வட்டி கிடையாது.
➤ அனைத்து வேலைநாட்களிலும் மாலை 4.00 மணி வரை நகைக்கடன் வழங்கப்படுகிறது.
➤ தங்க நகைகளுக்கு முழு பாதுகாப்பு மற்றும் காப்பீட்டு வசதி.



மிகக்குறைந்த சாதாரண வட்டியில் கடன்பெற

வீட்டு அடமான கடன் அதிகபட்சமாக ரூ.20.00 இலட்சம் வரை



புதிய வீடு கட்ட குறைந்த வட்டியில் ரூ.75.00 இலட்சம் வரை

எந்தவித மறைமுக கட்டணம் இல்லை... செயலாக்க கட்டணம் இல்லை, கடன் சலுகை சாதாரண வட்டி.

தவணைக்காலம் 50 வாரங்கள் | சிறு வணிகக் கடன் உயர்ந்தபட்சமாக கடன் தொகை ரூ.50,000 வரை | தகுதியுடையவர்கள் : பூ கடை, பழக்கடை, காய்கறி கடை, பெட்டிக்கடை, மளிகைக்கடை, மீன்கடை, துணி வியாபாரம்.

## கடன் சேவைகள்

- நகைக்கடன் • தனிநபர் சிறு வணிகக்கடன்
- சுய உதவிக்குழு கடன் • டாம்கோ கடன்
- டாப்செட்கோ கடன் • மாற்றுத்திறனாளிகள் கடன்
- தனிநபர் சம்பள கடன் • மகளிர் தொழில் முனைவோர் கடன்
- பணிபுரியும் மகளிர் கடன் • பண்ணை சாரா கடன்
- வீடு கட்டும் கடன் • வீட்டு அடமானக் கடன்
- கைம்பெண்கள் (ம) கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கான கடன்
- வேளாண் (ம) ஊரக வளர்ச்சிக்காக விவசாயிகளுக்கு 0% வட்டியில் பயிர்க்கடன் மற்றும் குறைந்த வட்டியில் மத்திய கால கடன்கள்.

சிறப்புவைப்பு

Trust me 400 days வட்டி 8 %

## நிரந்தர வைப்புக்கு வட்டி விகிதம்

| காலம் | பொது | மூத்த குடிமக்கள் |
|---|---|---|
| 7 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை | 4.00% | 4.00% |
| 46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை | 4.50% | 4.50% |
| 91 நாட்கள் முதல் 180 நாட்கள் வரை | 5.00% | 5.00% |
| 181 நாட்கள் முதல் 364 நாட்கள் வரை | 6.50% | 7.00% |
| 1 வருடம் முதல் 3 வருடம் வரை | 7.25% | 7.75% |
| 3 வருடத்திற்கு மேல் | 7.25% | 7.75% |
| மாற்றுத்திறனாளிகள் (1 வருடத்திற்கு மேல்) | 7.50% | 8.00% |

## சிறப்பு திட்டங்கள்

☞ பயிர் காப்பீட்டுத் திட்டம் (PMFBY)
☞ பிரதான் மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா திட்டம் (PMSBY)
☞ பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா திட்டம் (PMJJBY)

வணிக வங்கிகளுக்கு இணையான டிஜிட்டல் வசதிகள் கொண்ட வங்கி

UPI PAYMENTS — G Pay, PhonePe, Paytm UPI, BHIM — NEFT & RTGS

Mobile Banking → IMPS — MICRO ATM

வங்கியின் சேவைகள் ! உங்கள் கையில் !!

வாடிக்கையாளர்கள் டிஜிட்டல் சேவையை பயன்படுத்தி கொள்ளவும்.

வங்கியில் முதலீடு செய்துள்ள வைப்புகளுக்கு DICGC நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது.

வாடிக்கையாளர்களின் நேசமிகு துரித சேவையே வங்கியின் நோக்கம்

இன்றே அணுகுவீர்! வங்கியின் தலைமை அலுவலகம் மற்றும் 27 கிளைகள்

**பெரும் பொங்கல் தொகுப்பு,**




மஞ்சள் தூள்50கிராம், சர்க்கரை 500 கிராம், கூட்டுறவு உப்பு1கிலோ, துவரம் பருப்பு 250 கிராம், உளுத்தம் பருப்பு 250 கிராம், கடலைப் பருப்பு 200 கிராம், பச்சைப் பட்டாணி100 கிராம், பாசிப் பருப்பு (சிறுபருப்பு) 250கிராம், வெள்ளை சுண்டல் 200 கிராம், வேர்க்கடலை 200 கிராம், பொட்டுக்கடலை200கிராம், வரமிளகாய் 250 கிராம், புளி 200கிராம், தனியா250கிராம், கடுகு 100கிராம், மிளகு50கிராம், சீரகம் 50 கிராம், வெந்தயம் 100 கிராம், சோம்பு50கிராம், ஏலக்காய் 5 கிராம், செக்கு கடலை எண்ணெய் 1/2லிட்டர்,

வரகு 500 கிராம், சாமை 500 கிராம், திணை 500 கிராம், ரவை 500 கிராம், அவல் 250 கிராம், ராகிமாவு 500 கிராம், கோதுமை மாவு 500 கிராம், ஜவ்வரிசி 200 கிராம், வறுத்த சேமியா 170 கிராம், மல்லி தூள் 50 கிராம், சாம்பார் தூள் 50 கிராம், மிளகாய் தூள் 50 கிராம், பெருங்காயத்தூள் 25 கிராம் என 34 பொருட்கள் அடங்கிய பொங்கல் தொகுப்பு, பெரிய மளிகை தொகுப்புடன் ரூ.999/ என்ற விலையில் விற்பனை செய்யப்படவுள்ளது. இந்த பெரும் பொங்கல் தொகுப்புடன் மட்டும் அரை கிலோ நாட்டுச் சர்க்கரை விலை யில்லாமல் வழங்கப்படவுள்ளது.

இந்த தொகுப்புகள் அனைத்தும் வெளி சந்தையில் கிடைப்பதை விட குறைவான விலைக்கே விற்பனை செய்யப்படுகிறது.எனவே, கூட்டுறவுத் துறையின் மூலம் ”கூட்டுறவு பொங்கல்” என்ற பெயரில் தமிழ்நாடு முழுவதும் உள்ள கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகச்சாலைகள், பிரதம கூட்டுறவு பண்டகச்சாலைகள், கூட்டுறவு விற்பனைச் சங்கம், சுயசேவை பிரிவுகள் மற்றும் சில்லறை விற்பனை நிலையங்கள் போன்ற அனைத்து விற்பனை அலகுகள் மூலம் பொங்கல் தொகுப்பு விற்பனையினை வாங்கி அனைத்து தரப்பு மக்களும் சிறப்பாக பொங்கல் பண்டிகையை கொண்டாடி மகிழ கேட்டுக்கொள்கிறேன் என மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இந்நிகழ்ச்சியில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். ஜெ.ராதாகிருஷ்ணன்.இ.ஆ.ப., அவர்கள், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் டாக்டர். ந.சுப்பையன்.இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) திருமதி.ப.காயத்ரி கிருஷ்ணன்.இ.ஆ.ப., உட்பட கூட்டுறவுத்துறை அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

ஈரோடு மாவட்டம்

# திண்டல்மலை நகர கூட்டுறவு சங்கத்தில் 2,171 பயனாளிகளுக்கு பல்வேறு கடனுதவிகளை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் வழங்கினார்.




மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள், திண்டல்மலை நகர கூட்டுறவு சங்கத்தில் 2,171 பயனாளிகளுக்கு ரூ.25,05,97,700/- மதிப்பீட்டில் பல்வேறு கடனுதவிகளை வழங்கினார்.

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் ஈரோடு மாவட்டம், பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம், ஈரோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் தலைமையகம், கிளை அலுவலக மங்களம் பதனிடும் அலகு மற்றும் ஈரோடு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் ஆய்வு மேற்கொண்டு, திண்டல்மலை நகர கூட்டுறவு சங்கத்தில் 2,171 பயனாளிகளுக்கு ரூ.25.05 கோடி மதிப்பீட்டில் பல்வேறு கடனுதவிகளை 21.11.2024 அன்று வழங்கினார்.


இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது,

ஈரோடு மாவட்டத்தில் கூட்டுறவுத்துறையின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டப்பணிகள் குறித்து 21.11.2024 அன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஈரோடு மாவட்டத்தை பொறுத்த வரை தென்னை விவசாயிகள் அதிகப்படியாக இருக்கின்ற காரணத்தால், இங்கு விளையக்கூடிய தேங்காய்களை கொப்பரைகளாக மாற்றியும் தங்களுடைய வாழ்வாதாரத்திற்கு பயன்படுத்தி

வருகின்றனர். இந்த விவசாய பெருங்குடி மக்கள் வரவு செலவு செய்கின்ற தொடக்க வேளாண்மை கூட்டுறவு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கமானது நல்லமுறையில் செயல்பட்டு, விவசாயிகள் பாராட்டுகின்ற வகையில் தரம் உயர்த்தப்பட்டு, கிராமப்புற கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்படும் திட்டங்கள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. ஈரோடு மாவட்ட கூட்டுறவுத் துறையின் செயல்பாடுகள் பாராட்டத்தக்க வகையில் உள்ளது. மேலும், விவசாயிகள், சாலையோர வியாபாரிகள், மகளிர் சுயஉதவிக்குழு ஆகியவற்றினை முன்னேற்றுவதே கூட்டுறவுச் சங்கங்களின் முக்கிய நோக்கமாகும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுரையின்படி, விவசாயிகளுக்கான பயிர்க்கடன் ரூ.12 ஆயிரம் கோடியில் இருந்து, தற்போது ரூ.16,500 கோடி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், கூட்டுறவு வங்கி மூலம் பண பரிவர்த்தனை இந்தாண்டு ஒரு இலட்சம் கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு வங்கியில் ஏடிஎம் கார்டுகள் வழங்கும் பணி 60 விழுக்காடு நிறைவடைந்துள்ளது. தேசியமயமாக்கப்பட்ட மற்றும் தனியார் வங்கிகளுக்கு இணையாக கூட்டுறவு வங்கிகளை உயர்த்த புதுமையான திட்டங்கள் மூலம் புதுமைப்படுத்த அனைவரும் முனைப்போடு செயல்பட வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் மகளிர் சுயஉதவிக்குழு கடன், மாற்றுத்திறனாளிகள் கடன், மகளிர் தொழில் முனைவோர் கடன், டாம்கோ கடன், சம்பளக் கடன், மாத வருமானம் பெறும் மகளிர் கடன், சிறுவணிகக் கடன், வீட்டுவசதி கடன், வீடு அடமானக் கடன், பண்ணைசாராக்



கடன், மத்தியக்கால கடன், கே.சி.சி. பயிர்க்கடன், கே.சி.சி.நடைமுறை மூலதனக் கடன், கே.சி.சி.கூட்டு பொறுப்பு குழு பயிர்க்கடன், கே.சி.சி.விவசாய நகைக்கடன், சரக்கீட்டுக்கடன், வாகனக் கடன் என மொத்தம் 2,171 பயனாளிகளுக்கு ரூ.25,05,97,700/- மதிப்பீட்டில் கடனுதவிகளை வழங்கினார்.

முன்னதாக, பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம், கொப்பரை ஏல பணிகள், பதனிடும் அலகுகள், எண்ணெய் அரவை ஆலையில் தயாரிக்கப்படும் எண்ணெய் வகைகள் ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்து நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு, விவசாயிகளுடன் கலந்துரையாடி, விவசாயிகளின் கோரிக்கைகளை கேட்டறிந்தார். தொடர்ந்து, ஈரோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் தலைமையகம், மங்களம் பதனிடும் அலகின் செயல்பாடுகள், அங்கு தயாரிக்கப்படும் மஞ்சள், ராகிமாவு, மசாலா பொருட்கள் தயாரிப்பு மற்றும் பேக்கிங் ஆகியவற்றினை பார்வையிட்டார். மேலும், ஈரோடு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் வளர்ச்சி மற்றும் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் தட்டாம்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் ஆகியவற்றில் 4 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமண ஆணைகளையும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம்/விவசாயம் இயந்திரமாக்கலின் துணைப்பணி திட்டத்தின்கீழ் கொள்முதல் செய்யப்பட்ட ரூ.8.00 இலட்சம் மானியத்தில் ரூ.15.99 இலட்சம் மதிப்பீட்டில் டிராக்டர், சுழற்கழப்பை, ஏர்கலப்பை உள்ளிட்ட வேளாண் இயந்திரங்களை காஞ்சி கோயில் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் பயன்பாட்டிற்கு வழங்கும் பொருட்டு, அதன் சாவியினை வழங்கினார்.

இந்த ஆய்வின்போது, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், டாக்டர். என்.சுப்பையன் இ.ஆ.ப., மாண்புமிகு ஈரோடு மாநகராட்சி மேயர் திருமதி.சு.நாகரத்தினம், துணைமேயர் திரு.வே.செல்வராஜ், பெருந்துறை பேரூராட்சி தலைவர் திரு.ராஜேந்திரன், கூடுதல் பதிவாளர் திரு.சொ.சீனிவாசன், ஈரோடு மண்டல கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் திரு.க.ராஜ்குமார், ஈரோடு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கூடுதல் பதிவாளர்/மேலாண்மை இயக்குநர் மரு.சு.செந்தமிழ்ச்செல்வி, ஈரோடு மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை இணைப்பதிவாளர்/மேலாண்மை இயக்குநர் திரு.த.செல்வக்குமரன், ஈரோடு சரக கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளர் திருமதி.ஜி.காலிதா பானு, கோபி சரக கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளர் திரு.இரா.முத்துச்சிதம்பரம், பயிற்சி துணைப்பதிவாளர் திரு.ப.அஜித்குமார், ஈரோடு மாவட்ட கூட்டுறவு ஒன்றிய கூட்டுறவு சார்பதிவாளர்/செயலாட்சியர் திரு.மு.பா. பாலாஜி, துறை சார்ந்த அலுவலர்கள், சங்க செயலாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

# ஆர்.கே.10. விருதுநகர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிட்., விருதுநகர்

# 104/1, மதுரை ரோடு, அஞ்சல் பெட்டி எண் : 8, விருதுநகர்

தொலைபேசி எண்: (04562) 245815

Website : www.vrdccbank.in Email : virudhunagardccb@gmail.com

| வ. எண் | இட்டுவைப்பு காலம் | மூத்த குடிமக்கள் அல்லாத வாடிக்கை யாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்படும் வட்டி விகிதம் | மூத்த குடிமக்களுக்கு நிர்ணயம் செய்யப்படும் வட்டிவிகிதம் |
|---|---|---|---|
| 1. | 7 நாட்கள் முதல் 14 நாட்கள் வரை | 4.00% | 4.00% |
| 2. | 15 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை | 4.50% | 4.50% |
| 3. | 46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை | 5.00% | 5.00% |
| 4. | 91 நாட்கள் முதல் 180 நாட்கள் வரை | 5.60% | 5.60% |
| 5. | 181 நாட்கள் முதல் 364 நாட்கள் வரை | 6.50% | 6.50% |
| 6. | ஒரு வருடம் முதல் 3 வருடங்கள் வரை | 7.50% | 8.00% |
| 7. | 3 வருடத்திற்கு மேல் | 7.30% | 7.80% |

- வைப்புகளுக்கு கூடுதல் வட்டி
- NEFT & RTGS வசதி
- ATM மற்றும் POS வசதி
- Mobile Banking வசதி
- INSTA CARD வசதி
- Micro ATM வசதி
- MSME கடன்
- சம்பளக்கடன்
- Bank of Wheels வசதி
- குறைந்த வட்டியில் நகைக்கடன்
- தனி நபர் நகைக்காசுக் கடன்
- வீட்டு வசதி மற்றும் வீடு அடமானக்கடன்
- சிறு வணிகக்கடன்
- மாற்றுத்திறனாளிகள் கடன்
- முதலீட்டுக் கடன்கள்
- சுய உதவிக் குழுக்கடன்கள்
- மகளிர் தொழில் முனைவோர் கடன்
- UPI, IMPS, Phonepay, Gpay, Paytm. Whatsapp pay வசதி

ப்பி.இராஜலட்சுமி

இணைப்பதிவாளர் / மேலாண்மை இயக்குநர்

## திண்டுக்கல் மாவட்டத்தில்

## 71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் 4,636 பயனாளிகளுக்கு ரூ.44.53 கோடி மதிப்பீட்டில் மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் ஆகியோர் கலந்துகொண்டு கடனுதவிகளை வழங்கினர்.

மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.இ.பெரியசாமி அவர்கள் மற்றும் மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி அவர்கள் ஆகியோர் 71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் கலந்து கொண்டு 4,636 பயனாளிகளுக்கு ரூ.44.53 கோடி மதிப்பீட்டில் கடனுதவிகளை வழங்கினர்.

மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.இ.பெரியசாமி அவர்கள் மற்றும் மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி அவர்கள் ஆகியோர் திண்டுக்கல் எஸ்.எஸ்.எம். பொறியியல் மற்றும் தொழில்நுட்பக்கல்லூரி கூட்ட அரங்கத்தில் 17.11.2024 அன்று மாவட்ட




ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற 71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் கலந்துகொண்டு மாவட்ட அளவிலான சிறந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கு பாராட்டுச் சான்றிழ்கள் மற்றும் கேடயங்கள், 4,636 பயனாளிகளுக்கு ரூ.44.53 கோடி மதிப்பீட்டிலான கடனுதவிகளை வழங்கினர். திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ஆர்.சச்சிதானந்தம், பழனி சட்டமன்ற

உறுப்பினர் திரு.இ.பெ.செந்தில்குமார், வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ச.காந்திராஜன் மற்றும் திண்டுக்கல் மாநகராட்சி வணக்கத்திற்குரிய மேயர் திருமதி இளமதி ஜோதிபிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் வாயிலாக, மகளிர் சுயஉதவிக்குழு கடனாக(116 குழுக்கள்1,426 பயனாளிகள்) ரூ.9.33 கோடி, கே.சி.சி. பயிர்க்கடனாக 1,782 பயனாளிகளுக்கு ரூ.26.71 கோடி, கால்நடை பராமரிப்பு நடைமுறை மூலதனக்கடன் 307 பயனாளிகளுக்கு ரூ.1.87 கோடி, மாற்றுத்திறனாளிகள் கடன் 17 பயனாளிகளுக்கு ரூ.9.00 இலட்சம், சிறு வணிகர்கள் கடன் 26 பயனாளிகளுக்கு ரூ.29.00 இலட்சம், மத்திய கூட்டுறவு வங்கி கிளைகள் வாயிலாக, மகளிர் சுயஉதவிக்குழு கடன்(76 குழு913 பயனாளிகள்) ரூ.5.55 கோடி, மாற்றுத் திறனாளிகள் கடன் 36 பயனாளிகளுக்கு ரூ.17.00 இலட்சம், கைம்பெண்கள் கடனுதவி 20 பயனாளிகளுக்கு ரூ.9.00 இலட்சம், சிறுவணிகக் கடனுதவி 104 பயனாளிகளுக்கு ரூ.40.00 இலட்சம், நாட்டுப்புறக் கலைஞர்கள் கடன் 5 பயனாளிகளுக்கு ரூ.3.00 இலட்சம், என ஆக மொத்தம் 4,636 பயனாளிகளுக்கு ரூ.44.53 கோடி மதிப்பீட்டிலான கடனுதவிகளை மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.இ.பெரியசாமி அவர்கள் மற்றும் மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி அவர்கள் ஆகியோர் பயனாளிகளுக்கு வழங்கினர்.

இவ்விழாவில், மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. இ.பெரியசாமி அவர்கள் பேசியதாவது:

இந்திய அரசின் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாயத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. கிராமப்புற பொருளாதார முன்னேற்றத்தில் வேளாண் உற்பத்திக்கு முக்கியத்துவம் தரப்பட்டது. இந்தியாவில் உள்ள ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு கூட்டுறவு சங்கம், ஒரு பள்ளிக்கூடம், ஒரு ஊராட்சி அலுவலகம் ஆகியவை இன்றியமையாத ஒன்றாகும் என வலியுறுதித்தியவர் இந்தியாவின் முன்னாள் பிரதமர் மாண்புமிகு திரு.ஜவஹர்லால்நேரு அவர்கள் ஆவார். அவரது நினைவினை போற்றும் விதத்தில் அவரது பிறந்தநாளான நவம்பர் 14ஆம் தேதி முதல் 7 நாட்களுக்கு 'கூட்டுறவு வாரம்' கொண்டாடப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக திண்டுக்கல் மாவட்டத்தில் கூட்டுறவு கொள்கைகளையும், செயல்பாடுகளையும் பொதுமக்களுக்கு தெரிவிக்கும் விழாவாக 71 வது ஆண்டு அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவாக சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றது முதல், எல்லோருக்கும் எல்லாம் என்ற வகையில் ஆட்சி நடத்தி வருகிறார். தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றி வருகிறார்கள்.

டாக்டர் கலைஞர் அவர்கள் 2006 ஆம் ஆண்டு ஆட்சி பொறுப்பெற்ற பிறகு விவசாயிகள் கூட்டுறவு வங்கியில் வாங்கிய கடனை தள்ளுபடி செய்தார். விவசாயத்திற்கு இலவச மின்சாரத்தை வழங்கினார். மகளிர் சுய உதவிக்குழுவை உருவாக்கியவர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். அந்த வழியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெண்கள்

மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தில் 1.18 கோடி குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் கூட்டுறவுத்துறையின் சார்பில் திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்ற தொகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது. இந்தக் கல்லூரிக்கு இதுவரை ரூ.100.00 கோடி வரை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டடம் கட்டுமான பணிகள் நிறைவுபெற்று, எஞ்சியுள்ள பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது. 2022-2023 கல்வி ஆண்டு முதல் கல்லூரி வாடகைக் கட்டடத்தில் துவங்கப்பட்டு தற்போது முதலாம் ஆண்டு 636 மாணவர்கள், இரண்டாம் ஆண்டு 252 மாணவர்கள், மூன்றாம் ஆண்டு 223 மாணவர்கள் என 1,111 மாணவர்கள் மற்றும் 35 ஆசிரியர்களுடன் செயல்பட்டு வருகிறது.

கூட்டுறவுச் சங்கங்களில் மாணவர்களையும் இடம்பெற செய்யும் வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விவசாயிகள், மகளிர், மாணவ, மாணவிகள் என அனைவரும் பயன்பெறும் வகையில், நகைக்கடன், சுயஉதவிக்குழுக் கடன், தொழில் கடன், உரம், டிராக்டர், மளிகைப்பொருட்கள் என பன்முகத்தன்மையுடன் கூட்டுறவுத் துறை செயல்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தரம், விலை குறைவு, நம்பிக்கை என கூட்டுறவுத்துறையை மேம்படுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டு வருகிறார்கள். அதற்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். கூட்டுறவே நாட்டுயர்வு. எனவே கூட்டுறவை மக்கள் இயக்கமாக கொண்டு செல்ல அனைவரும் ஒன்றுபட்டு செயல்பட வேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களால் கடன் பெறப்பட்ட 5 சவரனுக்குட்பட்ட நகைக் கடன்கள் தள்ளுபடி செய்யப்படும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கிணங்க, அதனைச் செயல்படுத்திடும் முகத்தான் தகுதியான நபர்களுக்கு தள்ளுபடி வழங்கிட வழி காட்டு நெறிமுறைகள் குறிப்பிட்டு 01.11.2021 அன்று அரசாணை வெளியிடப் பட்டுள்ளது. அதன்படி, மாநிலம் முழுவதும் 12,55,233 பயனாளிகளுக்கு ரூ.4818.88 கோடி அளவிற்கு நகைக்கடன் தள்ளுபடி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, திண்டுக்கல் மாவட்டத்தில், 53,899 பயனாளிகளுக்கு ரூ.193.77 கோடி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தில், மகளிர் சுயஉதவிக்குழுக் கடன் தள்ளுபடி தொடர்பாக 3861 குழுக்களைச் சார்ந்த 35246 நபர்களுக்கு ரூ.87.36 கோடி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. பயிர்க்கடன் தள்ளுபடி திட்டம் 2021-ன்படி, திண்டுக்கல் மாவட்டத்தில், கூட்டுறவுச் சங்கங்களில் பயிர்க் கடன் பெற்ற விவசாயிகள் 45,145 நபர்களுக்கு ரூ.525.90 கோடி கடன்தள்ளுபடிசெய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழகத்தின் முதல்வராக பொறுப்பேற்றது முதல் அனைத்து துறைகளிலும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்ற இந்த காலகட்டத்தில், தமிழகத்தில் இருக்கின்ற விவசாயிகளுக்கும், ஏழை, எளிய மக்களுக்கும் நம்முடைய அரசின் திட்டங்களை திட்டங்களை முழுமையாக கொண்டு சேர்ப்பதிலும்,

கூட்டுறவுத் துறையின் மூலமாக இந்த அரசு கொண்டு வருகின்ற அனைத்து திட்டங்களையும் நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டு அதை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

அரசின் நலத்திட்டங்கள் அனைத்து மக்களையும் சென்றடைய வேண்டும், எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்பதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொற்கால ஆட்சி நடத்தி வருகிறார். அவருக்கு என்றென்றும் ஆதரவாக, உறுதுணையாக இருக்க வேண்டும், என மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

இவ்விழாவில், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி அவர்கள் பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பெண்கள் முன்னேற வேண்டும், பெண்கள் சமுதாயத்தில் எல்லா நிலை பெறவேண்டும் என்பதற்காக கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம் போன்ற எண்ணற்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள்.

இந்தியாவிலேயே விவசாயிகளுக்கு வட்டியில்லா கடனுதவி வழங்கப்பட்டது தமிழ்நாட்டில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியில்தான். கலைஞர் அவர்கள் வழியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கூட்டுறவுத்துறைக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறார்கள்.

தமிழ்நாட்டில் கூட்டுறவுத்துறை சார்பில் பயிர்க்கடன் வழங்கப்பட்டதில் திண்டுக்கல் மாவட்டத்தில்தான் அதிகளவு பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கான கடனுதவி ரூ.12.00 இலட்சத்திலிருந்து உயர்த்தப்பட்டு தற்போது ரூ.60.00 இலட்சம் வரை கடனுதவி வழங்கப்பட்டு வருகிறது. விவசாய கடன், சிறுவணிகக் கடன் என பல்வேறு கடனுதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தில் 1.18 கோடி மகளிர் பயனடைந்து வருகின்றனர். இத்திட்டத்தில் தகுதியுள்ள பயனாளிகள் விடுபட்டிருந்தால் அவர்களுக்கும் இத்திட்டத்தின் பயன்கள் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விவசாயம் மற்றும் விவசாயிகளை மேம்படுத்துவதற்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 2 இலட்சம் இலவச விவசாய மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

அரசு நகரப் பேருந்துகளில் மகளிர் இலவச பயணம் மேற்கொள்ள விடியல் பயணத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன்மூலம் பெண்களின் பயணச்செலவு குறைக்கப்பட்டு, வேலைக்குச் செல்லும் ஒவ்வொரு பெண்ணுக்கும் மாதம் சுமார் ரூ.900 வரை சேமிப்பு ஏற்படுகிறது.

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு காலை சிற்றுண்டி திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் 20.70 இலட்சம் குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர். இந்த திட்டம் இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லை. தமிழ்நாட்டில்தான் செயல்படுத்தப்படுகிறது.

பெண்களின் பாதுகாப்பிற்காகவும்,

பெண்கள் உயர்கல்வி கற்பதை ஊக்குவிப்பதற்காக தமிழக அரசு சார்பில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 6 முதல் 12ஆம் வகுப்பு வரை



அரசு பள்ளிகளில் படித்து உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் **'புதுமைப்பெண்'** திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன்மூலம் தமிழ்நாட்டில் பெண்கள் உயர்கல்வி படிப்பது 34 சதவீதம் உயர்ந்துள்ளது. தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் வாயிலாக சுமார் 5 இலட்சம் மாணவிகள் மாதந்தோறும் ரூ.1000 உதவித்தொகை பெற்று பயனடைந்து வருகின்றனர். இத்திட்டத்தில் மாணவர்களும் பயன்பெறும் வகையில் அரசு பள்ளி மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி(தமிழ்வழி கல்வி) படித்த மாணவர்கள் உயர்கல்வி படித்தால் அவர்களுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் 'தமிழ்ப்புதல்வன்' திட்டம் நடப்பு ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. இதற்காக ரூ.360 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தில் ஆத்தூர் சட்டமன்ற தொகுதியில் 2 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதியில் 2 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், ஒரு தொழிற் பயிற்சி நிலையம், பழனியில் சித்தா மருத்துவக் கல்லூரி, கொடைக்கானலில் கூட்டுறவு பயிற்சி மேலாண்மை இணையம் தொடங்கிட ரூ.200 கோடி நிதி என 7 கல்வி நிறுவனங்கள் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

எல்லோருக்கும் எல்லாம் என்ற வகையில் அனைத்துத் தரப்பு மக்களின் நலனுக்காக எண்ணற்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்த வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு அனைவரும் ஆதரவாக இருக்க வேண்டும், என மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

இவ்விழாவில், திண்டுக்கல் மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்திற்கு கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிதி ரூ.46.89 இலட்சம், கூட்டுறவு கல்வி நிதி(2023–2024 ஆண்டு) ரூ.31.26 இலட்சம், கூட்டுறவு வாரவிழாவை முன்னிட்டு நடைபெற்ற கட்டுரைப்போட்டி , பேச்சு மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி, கல்லூரி, கூட்டுறவு சங்கங்கள், பணியாளர்களுக்கு பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் என 68 நபர்களுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்களை மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.இ.பெரியசாமி அவர்கள் மற்றும் மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி அவர்கள் ஆகியோர் வழங்கினர்.

திண்டுக்கல் மண்டல கூட்டுறவுத்துறையின் செயல்பாடுகள் திண்டுக்கல் மாவட்டத்தில் கூட்டுறவுத்துறையின் கீழ், மொத்தம் 274 கூட்டுறவு நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் கிராமபுற அளவில்

196 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், 3 நகர கூட்டுறவு கடன் சங்கங்கள், 4 நகர கூட்டுறவு வங்கிகள், 4 வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், 6 தொடக்கக் கூட்டுறவு வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள், 45 பணியாளர் கூட்டுறவு கடன் சங்கங்கள், ஒரு மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகச்சாலை, 8 தொடக்கக் கூட்டுறவு பண்டகசாலைகள், ஒரு மாவட்ட கூட்டுறவு அச்சகம், ஒரு மாவட்ட கூட்டுறவு ஒன்றியம், 4 மாணவர் கூட்டுறவு பண்டகச்சாலை, ஒரு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி ஆகியவற்றின் மூலம் ஏழை, எளிய விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் அரசு அறிவிக்கும் திட்டங்கள் மூலம் பலவித கடன்கள் வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் விவசாயிகள் நலம் சார்ந்த பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். வேளாண்மைத் துறையை உழவர் நலத்துறையாக மாற்றிய பெருமை நமது முதலமைச்சரையே சாரும். இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழகத்தில் தான் வேளாண் துறைக்கு என தனி நிதிநிலை அறிக்கை சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை இந்நேரத்தில் மிகவும் மகிழ்ச்சியுடன் தெரி வித்துக் கொள்கின்றேன்.

கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் திண்டுக்கல் மாவட்டத்தில் 2022–2023ஆம் ஆண்டில் 68 கிராமங்களில் 8586 விவசாயிகளுக்கு ரூ.104.77 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. 2023 2024ஆம் ஆண்டில் 60 கிராமங்களில் 11,004 விவசாயிகளுக்கு ரூ.129.61 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தில் கடந்த ஆண்டு 57,716 விவசாயிகளுக்கு ரூ.832.47 கோடி வட்டியில்லா பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. இவற்றில், புதிதாக சேர்க்கப்பட்ட 9,968 உறுப்பினர்களுக்கு ரூ.136.35 கோடி அளவிற்கு பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில், இதுவரை 22,261 விவசாயிகளுக்கு ரூ.344.98 கோடி அளவிற்கு வட்டியில்லா பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. இவற்றில், புதிதாக சேர்க்கப்பட்ட 3,137 உறுப்பினர்களுக்கு ரூ.50.28 கோடி அளவிற்கு பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது.இதுவரை விவசாய கடன்களுக்கு மட்டுமே வட்டியில்லா கடன் வழங்கப்பட்டு வந்த நிலையில், தற்போது ஆடு வளர்த்தல், மாடு வளர்த்தல், பன்றி வளர்த்தல் போன்ற கால்நடை வளர்ப்பு மற்றும் பராமரிப்பிற்கும் வட்டியில்லா கடன் வழங்கப்பட்டு வருகிறது. இதனால் விவசாய நிலங்கள் இல்லாதவர்களும் கால்நடை பராமரிப்பிற்காக அதிகபட்சமாக ரூ.2.00 இலட்சம் வரை வட்டியில்லா கடன் பெற்றுக்கொள்ளலாம். கடந்த ஆண்டு திண்டுக்கல் மாவட்டத்தில் 16,732 நபர்களுக்கு ரூ.97.01 கோடி கடனும், நடப்பாண்டு இதுவரை 6,795 நபர்களுக்கு ரூ.42.87 கோடி அளவிற்கு வட்டியில்லா கடன் வழங்கப்பட்டுள்ளது.

**“ டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது 1989 ஆண்டு மகளிர் சுய உதவிக் குழுக்களை தர்மபுரி மாவட்டத்தில் தொடங்கினார்கள். பெண்களுக்கான முன்னேற்றத்தைக் கொண்டுவர வேண்டுமென்பதற்காகவும் டாக்டர் கலைஞர் அவர்களால் சிந்தித்து உருவாக்கப்பட்டதுதான் இந்தத் திட்டம். அந்த அளவில் இது சிறப்பானதொரு திட்டமாக இன்று இந்திய அளவில் எல்லோரும் இத்திட்டத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ”**

# மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிட்.,



187, வடக்கு வெளி வீதி, மதுரை - 625 001.
தொலைபேசி எண் : 0452 - 2342051 முதல் 2342054 Fax : 0452 - 2345747
mdccbank@rocketmail.com, Post Box No. : 14
E-mail : mdccbank@rocketmail.com

## மக்கள் சேவையில் 112 ஆண்டுகள்

மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் தலைமை அலுவலகம் மற்றும் 45 கிளைகளுடன் பொது மக்களின் பேராதரவால் ஒரு நூற்றாண்டைக் கடந்து சீரும் சிறப்புடன் செயல்பட்டு சேவை செய்து வருகின்றது

**வங்கியின் வைப்புத் தொகை : ரூ. 169131.52 இலட்சம்**
**வங்கி வழங்கியுள்ள கடன் தொகை : ரூ. 241767.32 இலட்சம்**

### வாடிக்கையாளர்களின் வைப்புத் தொகைகளுக்கு வங்கி வழங்கும் வட்டி விகிதம்

| | |
|---|---|
| சேமிப்பு கணக்கு (தினசரி நிலுவைக்கு) | 3.00% |
| கால வைப்புகள் | |
| 7 நாட்கள் முதல் 14 நாட்கள் வரை | 3.00% |
| 15 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை | 4.50% |
| 46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை | 5.50% |
| 91 நாட்கள் முதல் 180 நாட்கள் வரை | 6.50% |
| 181 நாட்கள் முதல் 364 நாட்கள் வரை | 7.00% |
| 12 மாதங்கள் முதல் அதற்கு மேலும் | 7.50% |

60 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் இட்டு வைக்கும் வைப்புகளுக்கு 0.50% கூடுதல் வட்டி வழங்கப்படுகிறது.

### தலைமை அலுவலகம் மற்றும் வங்கி கிளைகள் மூலம் வழங்கப்படும் கடன்கள்

* தனி நபருக்கு ரூ. 30.00 இலட்சம் வரை மிகக் குறைந்த வட்டியில் நகைக்கடன்
* புதிதாக வீடு கட்டுவதற்கான கடன் மற்றும் வீட்டு அடமானத்தின் பேரில் அடமானக் கடன்
* தொழில் முனைவோருக்கான கடன்
* சிறு வணிகக் கடன் மற்றும் சிறு வணிக கூட்டுப்பொறுப்புக் குழுக் கடன்
* விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த கடன்கள்
* மகளிர் சுய உதவிக் குழுக் கடன்
* பணிபுரியும் மகளிருக்கு கடன்
* கிளைகள் மூலம் மத்திய கால முதலீட்டுக் கடன்
* மாற்றுத்திறனாளிகளுக்கான கடன்
* MSME சிறுத் தொழில் உரிமையாளர்கள் / பங்குதாரர் நிறுவனங்கள்/ கம்பெனிகள் மற்றும் கூட்டுக் குழுக்களுக்குக் கடன்

இது போன்ற பலவகையான கடன்கள் வழங்கப்படுகின்றது. மேலும் விபரங்கள் தெரிந்து கொள்ள மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தலைமை அலுவலகம் மற்றும் 45 கிளைகளை தொடர்பு கொள்ள கேட்டுக் கொள்கிறோம்.

**மேலும் வாடிக்கையாளர்களுக்கு**

* குறைந்த வாடகையில் பாதுகாப்பு பெட்டக வசதி
* ATM (தானியங்கி பணம் கொடுக்கும் இயந்திரம்) வசதி
* RTGS & NEFT வசதி உள்ளது.
* அலைபேசி வங்கியியல் சேவை (Mobile Banking Service)
* விரைவில் இணையதள வங்கி சேவை (Net Banking Facility)

**செயல்பாட்டில் உள்ள வங்கியின் புதிய திட்டம்**

சிறுவர் / சிறுமியர்களுக்கான கண்மணி சேமிப்பு திட்டம்.
இத்திட்டத்திற்கு சாதாரண சேமிப்புக்கு வழங்கப்படும் வட்டியைக் காட்டிலும் கூடுதலாக 1% சேர்த்து 4% வட்டி வழங்கப்படும்.

**"இன்றைய சேமிப்பு ! நாளைய பாதுகாப்பு"**
**"கூட்டுறவு வங்கியில் சேமிப்பீர் வாழ்வை வளமாக்குவீர்"**

**இணைப்பதிவாளர் / மேலாண்மை இயக்குநர்**

கடந்த ஆண்டு திண்டுக்கல் மாவட்டத்தில் 2,470 குழுக்களில் உள்ள 29,640 நபர்களுக்கு ரூ.166.09 கோடி கடனும், நடப்பாண்டு இதுவரை 1,377 குழுக்களில் உள்ள 16,524 உறுப்பினர்களுக்கு ரூ.99.05 கோடி கடனும் வழங்கப்பட்டுள்ளது.



விவசாயிகள் நில மேம்பாடு செய்வதற்கும், டிராக்டர் வாங்குவதற்கும், தோட்டத்தில் பைப்லைன் அமைப்புதற்கும் மத்திய கால முதலீட்டுக்கடன் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி, திண்டுக்கல் மாவட்டத்தில் கடந்த ஆண்டு 568 நபர்களுக்கு ரூ.20.89 கோடி கடனும், நடப்பாண்டு இதுவரை 148 நபர்களுக்கு ரூ.5.53 கோடி மத்திய கால முதலீட்டுக்கடனும் வழங்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் தங்களது குடும்ப தேவைகளுக்காக கூட்டுறவு நிறுவனங்களில் நகைகளை அடமானமாக வைத்து கடன் பெற்றுக்கொள்ள வழிவகைகள் உள்ளது. அதன்படி திண்டுக்கல் மாவட்டத்தில் கடந்த ஆண்டு 2,15,429 நபர்களுக்கு ரூ.1,670.11 கோடி கடனும், நடப்பாண்டு இதுவரை 1,42,114 நபர்களுக்கு ரூ.1,204.55 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகள் தங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்த, சிறுதொழில் செய்ய குறைந்த வட்டியில் கடன் வழங்கப்பட்டு வருகிறது. திண்டுக்கல் மாவட்டத்தில், கடந்த ஆண்டு 663 மாற்றுத்திறனாளி நபர்களுக்கு ரூ.265.43 இலட்சம் கடனும், நடப்பாண்டு இதுவரை 331 மாற்றுத்திறனாளி நபர்களுக்கு ரூ.163 இலட்சம் கடனும் வழங்கப்பட்டுள்ளது.

சிறுபான்மையினர் தங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்த, சிறுதொழில் செய்ய குறைந்த வட்டியில் கடன் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி திண்டுக்கல் மாவட்டத்தில், கடந்த ஆண்டு 1383 நபர்களுக்கு ரூ.915.57 இலட்சம் டாம்கோ கடன் வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டு இதுவரை 230 நபர்களுக்கு ரூ.249 இலட்சம் டாம்கோ கடன் வழங்கப்பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் தங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்த, சிறுதொழில் செய்ய குறைந்த வட்டியில் கடன் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி திண்டுக்கல் மாவட்டத்தில், கடந்த ஆண்டு 1466 நபர்களுக்கு ரூ.1,217.17 இலட்சம் டாப்செட்கோ கடன் வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டு இதுவரை 81 நபர்களுக்கு ரூ.74.00 இலட்சம் டாப்செட்கோ கடன் வழங்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் தங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்த, தாட்கோ மூலம் கடன் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி திண்டுக்கல் மாவட்டத்தில், கடந்த ஆண்டு 292 நபர்களுக்கு ரூ.164.92 இலட்சம் கடன்

வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டு இதுவரை 590 நபர்களுக்கு ரூ.298.00 இலட்சம் தாட்கோ கடன் வழங்கப்பட்டுள்ளது.

நடைபாதை வியாபாரிகள், பெட்டிக்கடை வைத்திருப்போர் தங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்த கடன் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி திண்டுக்கல் மாவட்டத்தில், கடந்த ஆண்டு 4097 நபர்களுக்கு ரூ.1803.95 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டு இதுவரை 1647 நபர்களுக்கு ரூ.727.00 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தில் மகளிர் தொழில் முனைவோர் கடனாக கடந்த ஆண்டு 144 பெண்களுக்கு ரூ.132.5 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டு இதுவரை 121 பெண்களுக்கு ரூ.94.00 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கங்களின் அடிப்படை செயல்பாடான கடன் வழங்கல் மட்டுமல்லாது வேளாண் விளைபொருட்களை பதப்படுத்துதல், சந்தைப்படுத்துதல் மற்றும் மதிப்புக்கூட்டுதல், வேளாண் கருவிகள், கிடங்குகள், பதப்படுத்தும் வசதிகள், சரக்குந்துகள், சந்தை கூடங்கள் போன்றவற்றை நிறுவி விவசாயிகளுக்கு வாடகைக்கு விடுதல் மற்றும் கிராமப்புறங்களில் இணைய சேவை வழங்குதல் போன்ற பல்வேறு கடனல்லாத வேறு விதமான வணிக நடவடிகக்கைகள் மேற்கொள்வதன் மூலம் அச்சங்கங்களின் வணிகத்தை பெருக்கி, கூடுதல் வருவாய் ஈட்டச்செய்து அதன் மூலம் சங்க உறுப்பினர்களுக்கு சிறந்த சேவை வழங்கும் நோக்கத்துடன் திண்டுக்கல் மண்டலத்திலுள்ள அனைத்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களும் பல்நோக்கு சேவை மையங்களாக மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

திண்டுக்கல் மாவட்டத்தில் 177 கூட்டுறவு நிறுவனங்களில் உள்ள பொது சேவை மையங்கள் மூலம் கடந்த ஆண்டு 1,38,585 சேவைகள் வழங்கப்பட்டு ரூ.61.67 இலட்சம் இலாபம் ஈட்டப்பட்டுள்ளது. நடப்பாண்டு இதுவரை 52,350 சேவைகள் வழங்கப்பட்டு ரூ.25.49 இலட்சம் இலாபம் ஈட்டப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக செயல்படும் 8 கூட்டுறவு மருந்தகங்கள் மூலம் 20 சதவீதம் தள்ளுபடியுடன் குறைந்த விலையில், சிறந்த மற்றும் தரமான மருந்துகள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு ரூ.75.61 இலட்சத்திற்கு மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன, நடப்பாண்டு இதுவரை ரூ.10.29 இலட்சத்திற்கு மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் உள்ள கைம்பெண்கள் மற்றும் கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கு கூட்டுறவுத்துறை மூலம் 5 சதவீதம் வட்டியில் ரூ.50,000 வரை 350 நாட்களில் திருப்பி செலுத்தும் வகையில் கடன் வழங்கப்பட்டு வருகிறது. திண்டுக்கல் மாவட்டத்தில் கடந்த ஆண்டு 240 கைம்பெண்களுக்கு ரூ.109.75 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டு இதுவரை 97 கைம்பெண்களுக்கு ரூ.45.00 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் தங்களது விளைபொருட்களை விலையேறும்போது விற்பனை செய்ய ஏதுவாக தானிய ஈட்டுக்கடன் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி, கடந்த ஆண்டு 450 நபர்களுக்கு ரூ.1863.41 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டு இதுவரை 176 நபர்களுக்கு ரூ.121.00 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தில் வீடு கட்டுவதற்காக கடந்த ஆண்டு 81 நபர்களுக்கு ரூ.769.27 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டு இதுவரை 44 நபர்களுக்கு ரூ.691 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. வீட்டு அடமானத்தின் பேரில், கடந்த ஆண்டு 133 நபர்களுக்கு ரூ.808.84 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டு இதுவரை 73 நபர்களுக்கு ரூ.420 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தில் பண்ணைசாரா கடனாக கடந்த ஆண்டு 985 நபர்களுக்கு ரூ.811.37 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டு இதுவரை 639 நபர்களுக்கு ரூ.621 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தில் பணிபுரியும் பெண்களுக்கு கடந்த ஆண்டு 55 பெண்களுக்கு ரூ.167.85 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டு இதுவரை 33 பெண்களுக்கு ரூ.108.00 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள விவசாயிகள், உயிரி உரம் மற்றும் உயிரி பூச்சிக்கொல்லிகளை அதிகளவில் பயன்படுத்தி, இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் பொருட்டு, திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள எரியோட்டில் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு சொந்தமான இடத்தில் அந்நிறுவனத்தால் உயிரி உரம் மற்றும் உயிரி பூச்சிக்கொல்லிகள் உற்பத்தி அலகு ரூ.125 இலட்சம் மதிப்பீட்டிலும், 1000 மெ.டன் அளவு உற்பத்தித்திறன் கொண்ட நுண்ணூட்டச்சத்து கலப்புஉர அலகு ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டிலும் அமைக்கப்பட்டு, உற்பத்தி மற்றும் விநியோகபணி நடைபெற்று வருகிறது.

திண்டுக்கல் மற்றும் பழனி வேளாண் விளைபொருள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலம் கடந்த ஆண்டு 17,799 லிட்டர் மரச்செக்கு எண்ணெய் தயாரிக்கப்பட்டு ரூ.3.87 இலட்சம் இலாபம் ஈட்டப்பட்டுள்ளது. நடப்பாண்டு இதுவரை 7814 லிட்டர் மரச்செக்கு எண்ணெய் தயாரிக்கப்பட்டு ரூ.0.69 இலட்சம் இலாபம் ஈட்டப்பட்டுள்ளது.

வேடசந்தூர் வட்டாரத்திலுள்ள பூத்தாம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தினால் நடத்தப்படும் பெட்ரோல் டீசல் விற்பனை மூலம் கடந்த ஆண்டு 487.85 கிலோ லிட்டர் விநியோகம் செய்யப்பட்டு, ரூ2.43 இலட்சம் இலாபம் ஈட்டப்பட்டுள்ளது. நடப்பாண்டு இதுவரை 297.807 கிலோ லிட்டர் விநியோகம் செய்யப்பட்டு ரூ.1.17 இலட்சம் இலாபம் ஈட்டப்பட்டுள்ளது.

பழனி வேளாண் விளைபொருள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் மூலம் விவசாயிகளின் கொப்பரையை ஏலம் நடத்தி, சேவை புரிந்து வருகிறது. கடந்த ஆண்டு 107.054 டன் கொப்பரை ஏலம் விடப்பட்டு, ரூ76.90 இலட்சமும், நடப்பாண்டு இதுவரை 65.942 டன் கொப்பரை ஏலம் விடப்பட்டு, ரூ63.71 இலட்சமும் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முழுவதிலும் உள்ள அனைத்துக் கூட்டுறவு நிறுவனங்களிலும் கணினி மயமாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. திண்டுக்கல் மாவட்டத்தில் 196 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், 3 நகர கூட்டுறவு கடன் சங்கம் மற்றும் 45 பணியாளர் கூட்டுறவு சிக்கன நாணய சங்கங்கள் கணினி மயமாக்கப்பட்டு வருகிறது.

கூட்டுறவே ! நாட்டுயர்வு!

# சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி லிமிடெட்

SDCCB — DELIVERING PAR EXCELLENCE — INNOVATE FOR PERFECTION — QUEST FOR LEARNING — வளர்ந்து வளரும் வங்கி

செரி ரோடு, சேலம் - 636001, தொலைபேசி எண்: 0427 - 2451761-765
Email : slm_sdccbslm@yahoo.co.in & devtsdccb@gmail.com
Website : www.salemdccbank.com

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக மிகச்சிறந்த சேவை புரிந்ததற்காக எட்டு முறை தங்கப்பதக்கமும், பாராட்டுப் பத்திரமும் பெற்ற வங்கி

## மிகக் குறைந்த வட்டியில் வழங்கும் கடன்கள் விவரம்

| | | |
|---|---|---|
| தனி நபர் நகைக்கடன் | ₹ 10.00 இலட்சம் வரை | 8.50% |
| | ₹ 1000001 முதல் ₹ 20.00 இலட்சம் வரை | 10.50% |
| புதிய வீடு கட்ட கடன் | ₹ 75.00 இலட்சம் வரை | 9.00% |
| வீடு அடமானக் கடன் | ₹ 20.00 இலட்சம் வரை | 10.00% |

| இட்டுவைப்புக் காலம் | வட்டி விகிதம் | |
|---|---|---|
| | பொதுமக்களுக்கு | மூத்த குடிமக்களுக்கு |
| 1 முதல் 2 வருடங்கள் வரையிலான இட்டுவைப்புகளுக்கு | 6.50% | 7.00% |

## வங்கியின் சிறப்பு அம்சங்கள்

- 115 ஆண்டுகளாகத் தொடர்ந்து இலாபத்தில் இயங்கிவரும் வங்கி.
- சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் 74 கிளைகளில் வங்கியியல் சேவை.
- ரூ.4200 கோடிக்குமேல் இட்டுவைப்பு.
- நடைமுறை மூலதனம்ரூ.5739.99 கோடிக்குமேல்
- நவீனமயமாக்கப்பட்ட கிளைகள்.
- ஏ.டி.எம். சேவை.
- RTGS & NEFT மற்றும் Mobile Banking, IMPS, Gpay, Whatsapp pay, UPI, Phone Pay வசதிகள்.
- Micro ATM மூலம் AePS முறையில் பணம் செலுத்துதல் மற்றும் பெறும் வசதி. இதர வங்கி ATM Card மூலம் பணம் பெறும் வசதி.
- குறைந்த வாடகையில் பாதுகாப்புப் பெட்டக வசதி.
- சேமிப்புக் கணக்குகள் துவங்குவதில் விரைவான சேவை.
- பள்ளி மாணவர்களுக்கு சேமிப்பு கணக்கு சேவை (SSS SB A/C).
- PMSBY/PMJJBY காப்பீட்டுத் திட்ட வசதி.
- விரைவான நகைக் கடன் வசதி.
- மகளிர் / ஆடவர் சிறுவணிகக் கடன்.
- நுகர்வோர் கடன்.
- இருசக்கர வாகனக் கடன்.
- மாற்றுத்திறனாளிகள் கடன்.
- மகளிர் தொழில் முனைவோர் கடன்.
- மகளிர் சுய உதவிக் குழுக் கடன்.
- பணிபுரியும் மகளிருக்கான கடன்.
- கூட்டுப் பொறுப்புக்குழுக் கடன்.
- சம்பளக்கடன்.
- மத்திய கால விவசாயக் கடன் (MT Agri Loan)
- சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோருக்கான கடன் (MSME Loan)
- அரசு நலத்திட்டங்களின்கீழ் வரும் டாம்கோ, டாப்செட்கோ, தாட்கோ கடன்.
- ஆதரவற்ற மகளிர் / விதவை கடன்.
- கல்விக் கடன்.

கூடுதல் பதிவாளர் / மேலாண்மை இயக்குநர்

கூட்டுறவு அமைப்புகளில் அங்கத்தினர்களாக உள்ள விவசாய பெருங்குடிமக்கள், சிறு வியாபாரிகள், சுயஉதவிக்குழு உறுப்பினர்கள், மாற்றுத்திறனாளிகள், சிறுபான்மையின உறுப்பினர்கள் மற்றும் நகைக்கடன் பெறும் இணை உறுப்பினர்கள் விரைவாகவும், எளிதாகவும் கடன் பெற்றிட இணையவழி கடன் வழங்கும் வசதி செயல்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் இளைய தலைமுறையினர் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் காலவிரயமின்றி உடனடி வங்கிச்சேவை பெறுவது உறுதிச்செய்யப்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கும் சேவைகளை பொதுமக்கள் எளிதில் தெரிந்துகொள்ளவும், சேவைகளைப் பெறவும், நிர்வாகத்தினை செம்மைப்படுத்த அலுவலர்கள் களப்பணிகளை மேற்கொள்ளவும் “கூட்டுறவு செயலி” உருவாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் பொதுமக்களுக்கு துரிதசேவை வழங்கவும், களஆய்வு அறிக்கைகளை உடனுக்குடன் வழங்கவும் அதன் நிவர்த்தி அறிக்கைகளை உடன் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் அதன் அதிகார எல்லைக்குட்பட்ட அனைத்து மக்களின் பொருளாதார வளர்ச்சியையும் மேம்படுத்த தற்போது பல்நோக்கு சேவை சங்கங்களாக உருவாகி வருகின்றன. பல்நோக்கு சேவைகள் வழங்குவதற்கு ஏதுவாகவும் சேவைகள் அனைத்து தரப்பினரையும் விரைவில் சேரும் வண்ணம் திண்டுக்கல் மண்டலத்தில் 7 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு உட்கட்டமைப்பு நவீனமயமாக்க மற்றும் 6 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு புதிய அலுவலக கட்டடங்கள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பகுதி மக்களை சென்றடையவும், அனைத்து பகுதியில் உள்ள பொதுமக்கள் தங்கள் பகுதியிலேயே கூட்டுறவுச் சேவைகள் பெறவும் திண்டுக்கல் மண்டலத்தில் 5



தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் கிளைகள் துவங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 15.08.2024 சுதந்திரதினவிழா உரையில், "பொதுப்பெயர் (ஜெனரிக்) மருந்துகளையும் பிற மருந்துகளையும் குறைந்த விலையில் பொதுமக்களுக்கு கிடைக்கச் செய்யும் வகையில் முதற்கட்டமாக 1000 முதல்வர் மருந்தகங்கள் துவங்கப்படும்" என அறிவித்தார்கள். அதன்படி, திண்டுக்கல் மண்டலத்தில் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் 25 முதல்வர் மருந்தகங்கள் துவங்க



நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சில்லறை விற்பனை நிலையம், பண்ணை பசுமை கூட்டுறவு அங்காடி, மக்கள் சந்தை திண்டுக்கல் மண்டலத்தில் பொதுமக்கள் குறைந்த விலையில் நுகர்பொருட்கள், காய்கறிகள் பெற்றுபயன் பெறும் வகையில் 10 சில்லறை விற்பனை நிலையங்கள், 10 பண்ணை பசுமை கூட்டுறவு அங்காடிகள் மற்றும் 8 மக்கள் சந்தைகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திண்டுக்கல் மாவட்டத்தில் அரிசி பெறும் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு 6,79,409 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகை ரொக்கம் ரூ.1000 வீதம் ரூ.67.94 கோடி விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மேலும், 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு நீள கரும்புக்கு ரூ.2.24 கோடி ஒதுக்கீடு பெறப்பட்டு பொங்கல் பரிசுத்தொகுப்பு நியாய விலைக் கடைகள் வாயிலாக வழங்கப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தில் மொத்தம் 780 முழு நேர நியாய விலைக்கடைகளும், 446 பகுதி நேர நியாய விலைக்கடைகளும் செயல்பட்டு வருகிறது. இதில் வாடகை கட்டடத்தில் மட்டும் 184 நியாயவிலைக் கடைகள் செயல்பட்டு வருகிறது. மேலும், நடப்பாண்டில் திண்டுக்கல் மாவட்டத்தில் 285 புதிய நியாய விலைக்டைகளுக்கு கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

திண்டுக்கல் மாவட்டத்தில் குடும்ப அட்டைதாரர்கள் தங்கள் பகுதியிலேயே குடிமைப்பொருட்கள் பெற ஏதுவாக புதிதாக 64 முழுநேர நியாயவிலைக்கடைகளும், 173 பகுதி நேர நியாயவிலைக் கடைகளும் ஆக மொத்தம் 237 நியாயவிலைக் கடைகள் செயல்பட அனுமதிபெறப்பட்டுள்ளது. அதில்

63 முழுநேர நியாயவிலைக் கடைகளும், 167 பகுதிநேர நியாயவிலைக் கடைகளும் ஆகமொத்தம் 230 நியாயவிலைக் கடைகள் புதிதாக திறக்கப்பட்டுள்ளன.


திண்டுக்கல் மாவட்டத்தில் மாதந்தோறும் 6,62,266 குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசி 10,919 மெட்ரிக் டன், சர்க்கரை 824 மெட்ரிக்டன், கோதுமை 204 மெட்ரிக்டன், துவரம் பருப்பு 534 மெட்ரிக்டன், பாமாயில் 534 கிலோ லிட்டர், மண்ணெண்ணெய் 36 கிலோ லிட்டர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

கூட்டுறவுத்துறையின் கீழ் செயல்படும் நியாயவிலைக் கடைகளுக்கு ஐ.எஸ்.ஓ. தரச்சான்றிதழும், FSSAI உரிமமும் பெறப்பட்டு வருகின்றன. திண்டுக்கல் மண்டலத்தில் 193 நியாயவிலைக் கடைகள் ஐ.எஸ்.ஓ. தரச்சான்றிதழ் பெற்றுள்ளது. திண்டுக்கல் மண்டலத்தில் இதுவரை 510 எண்ணிக்கையிலான கடைகள் பொலிவுறச் செய்யும் திட்டத்தின் கீழ் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

தள்ளுவண்டியில் வியாபாரம் செய்பவர்கள், வெளிமாநில தொழிலாளர்கள் ஆகியோர் நலனைக் கருத்தில் கொண்டு, நியாயவிலைக் கடைகளில் 5 கிலோ மற்றும் 2 கிலோ FTL சிலிண்டர்கள் விற்பனை துவங்கப்பட்டது. திண்டுக்கல் மண்டலத்தில் 164 நியாயவிலைக் கடைகளில் QR code மூலம் பணம் செலுத்தும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் சுமார் 1,500க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெற்றுள்ளார்கள். திண்டுக்கல் மண்டலத்தில் செயல்படும் 1226 நியாயவிலைக் கடைகள் மற்றும் 100 சிறுகூட்டுறவு பல்பொருள் அங்காடிகள் மூலம் மாதம் ஒன்றிற்கு ரூ.110 லட்சம் அளவில் கட்டுப்பாடற்ற பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. திண்டுக்கல் மாவட்டத்தில், கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் நியாயவிலைக் கடைகளுக்கு 01.07.2021 முதல் நாளது தேதி வரை ரூ.4433.67 இலட்சம் பொதுவிநியோகத் திட்டமானியம் வழங்கப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மண்டலத்தில் கடந்த ஆண்டில் காலியாக இருந்த 317 விற்பனையாளர் பணியிடங்களும், 2 கட்டுநர் பணியிடங்களும் நிரப்பப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் 64 விற்பனையாளர் பணியிடங்களும், 12 கட்டுநர் பணியிடங்களும் நிரப்பப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்விழாவில், திண்டுக்கல் மண்டல கூட்டுறவு சங்கங்கள் இணைப்பதிவாளர் (கூ.பொ.) திருமதி இரா.சுபாஷினி, திண்டுக்கல் மாநகராட்சி வடக்கு மண்டலத் தலைவர் திரு.ரா.ஆனந்த், வேளாண்மை இணை இயக்குநர் (பொறுப்பு) திரு.எஸ்.ராஜா, கூட்டுறவு துணைப்பதிவாளர்கள் திருமதி பி.உஷா நந்தினி, திருமதி இரா.வெங்கட்லட்சுமி, திரு.இரா.அன்புக்கரசன், திருமதி பா.கௌரி மீனா, திருமதி தொ.ரா.வசந்தி, திரு.இரா.தே. பவணந்தி, திண்டுக்கல் மாவட்ட பால் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் பொதுமேலாளர் திருமதி க.வாணிஸ்வரி, திண்டுக்கல் மத்திய கூட்டுறவு வங்கி பொதுமேலாளர் திரு.ஜி.விநாயகமூர்த்தி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.சு.ஜெகவீரபாண்டியன், கூட்டுறவு சார் பதிவாளர்கள் திரு.ம.செல்வக்குமார், திரு.கு.அன்பரசு, திரு.நா.மதி மற்றும் கூட்டுறவுத்துறை அலுவலர்கள், பணியாளர்கள் பலர் கலந்துகொண்டனர்.


துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனம் (வரை)
THE TUDIYALUR CO-OPERATIVE AGRICULTURAL SERVICES LIMITED. NO. K. 1550
டியூகாஸ் பூச்சிக்கொல்லி மருந்துகள்
கோவை விதைகள்
ஒரே கூரையின் கீழ் அனைத்து இடுபொருட்களும்
TUCAS
விவசாய உபகரணக்கருவிகள்
வங்கிப் பணிகள்
அசோகா மார்க் கலப்பு உரங்கள் பயன்படுத்திய பயிர்கள்
அசோகா மார்க் கலப்பு உரங்கள்
Tudiyalur Post, Coimbatore - 641 034, TAMILNADU, INDIA
Phone : +91 0422 2642322, +91 0422-2642722, Fax: +91 0422-2642833
Email : tucas_1955@yahoo.co.in, info@tucas.org
Website : www.tucas.org



மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.சா.மு.நாசர் அவர்கள் திருவள்ளூர் தனியார் திருமணம் மஹாலில் 20.11.2024 அன்று 71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவை முன்னிட்டு கூட்டுறவுத்துறையின் மூலம் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்கினை பார்வையிட்டார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.த.பிரபுசங்கர் இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஜி.இராஜேந்திரன் திருவள்ளூர், திரு.ஆ.கிருஷ்ணசாமி பூவிந்தவல்லி, திரு.டி.ஜே.கோவிந்தராஜன் கும்மிடிப்பூண்டி, திரு.துரை சந்திரசேகர் பொன்னேரி, திருமதி. கே.வி.ஜி.உமா மகேஸ்வரி, காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கி கூடுதல் பதிவாளர், மேலாண்மை இயக்குநர் திருமதி.ஆ.க.சிவமலர், திருவள்ளூர் கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் திருமதி.தி.சண்முகவள்ளி ஆகியோர் உள்ளனர்.



தென் மண்டல கல்லூரிகளுக்கிடையே நடைபெற்ற கபடி மற்றும் பூ பந்து போட்டியில் ஆத்தூர் கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்கள் பூ பந்து போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசினையும், கபடி போட்டியிலும் வெற்றி பெற்று இரண்டாம் பரிசினையும் பெற்று மதுரை காமராஜர் பல்கலைக்கழக அணியில் இடம் பெற்றனர்.

# நீலகிரி மாவட்டத்தில்

## கூட்டுறவுத்துறை சார்பில் நடைபெற்ற 71வது அனைத்திந்தியக் கூட்டுறவு வார விழாவினை மாண்புமிகு தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் துவக்கி வைத்து,

- 7 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கடனுதவிகளையும்,
- 12 விவசாயிகளுக்கு விவசாயக் கடனுதவிகளையும் வழங்கினார்



நீலகிரி மாவட்டத்தில், கூட்டுறவுத்துறை சார்பில் நடைபெற்ற 71வது அனைத்திந்தியக் கூட்டுறவு வார விழாவினை மாண்புமிகு தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து, 7 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.51 இலட்சம் மதிப்பீட்டில் கடனுதவிகளையும், 12 விவசாயிகளுக்கு ரூ.9.03 இலட்சம் விவசாயக் கடனுதவிகளையும் வழங்கினார்.

நீலகிரி மாவட்டம், கூடலூர் ஜானகி அம்மாள் திருமண மண்டபத்தில், கூட்டுறவுத்துறை சார்பில் நடைபெற்ற 71வது அனைத்திந்தியக் கூட்டுறவு வார விழாவினை மாண்புமிகு தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ. சாமிநாதன் அவர்கள் 15.11.2024 அன்று குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து, 7 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.51 இலட்சம் மதிப்பீட்டில் கடனுதவிகளையும், 12 விவசாயிகளுக்கு ரூ.9.03 ரூ.9.03 இலட்சம் விவசாயக் கடனுதவிகளையும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு அரசு

தலைமை கொறடா திரு.கா.ராமச்சந்திரன் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாண்புமிகு தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்கள் தெரி வித்ததாவது :



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான 3/2 ஆண்டு காலத்தில் "எல்லாருக்கும் எல்லாமும்" என்னும் உயரிய நோக்கோடு செயல்படுத்தப்பட்டு வரும் ஆட்சியில் விடியல் பயணம், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, மகளிர் சுய உதவிக்குழு கடன் இரத்து உள்ளிட்ட மகளிர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் நாட்டின் முன்னுதாரணமாக திகழ்ந்து வருகிறது. குறிப்பாக, மாணாக்கர்களின் உயர்கல்வியை உறுதிப்படுத்தும் வகையில் புதுமைப் பெண் திட்டம் மற்றும் தமிழ் புதல்வன் திட்டம் ஆகிய திட்டங்கள் வரலாற்று சிறப்புமிக்கதாகும்.

மகளிர்கள் தங்கள் குடும்பத்திற்கு பொருளாதார ரீதியில் பங்காற்றிட வேண்டும் என்ற தொலைநோக்கு பார்வையில் அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதன்முதலாக தர்மபுரி மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக்குழுக்களை ஆரம்பித்தன் விளைவாக இன்று தமிழ்நாட்டில் தற்போது மகளிர் சுய உதவிக்குழுக்களின் எண்ணிக்கை அதிகரித்து, அதன் மூலம் சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த மகளிர்கள் தங்களது பொருளாதாரத்தில் வேகமாக முன்னேறி வருகிறார்கள்.

மேலும், கூட்டுறவுத்துறையின் மூலம் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கும், விவசாயிகளுக்கும் பல்வேறு கடனுதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளில் ஏறத்தாழ 1.56 இலட்சம் பயனாளிகளுக்கு ரூ.1,164 கோடி மதிப்பீட்டில் பல்வேறு கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, இன்று நடைபெற்ற இந்த விழாவில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஏற்றமிகு தமிழ்நாட்டை உருவாக்கிட, குழந்தைகளின் கல்வி மற்றும் அவர்களின் சீரான வளர்ச்சிக்காக இந்தியாவிற்கு மட்டுமல்ல உலக நாடுகளுக்கும் முன்னோடி திட்டமான முதலமைச்சர் காலை உணவு திட்டம், முட்டையுடன் கூடிய சத்துணவு திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களும், இளம் சிறார்களுக்கு இணை உணவுகள் வழங்கும் திட்டம், பாலூட்டும் தாய்மார்களுக்கு மகப்பேறு உதவித் திட்டம் ஆகிய திட்டங்களின் மூலம் தமிழ்நாட்டின் மாணவச் செல்வங்களுக்கும், மழலைச் செல்வங்களுக்கும், கர்ப்பிணிப் பெண்களுக்கும், தமிழ்நாடு அரசால் ஊட்டச்சத்து வழங்கப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின் இரண்டாம் கட்டம் இன்று அரியலூர் மாவட்டத்தில் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. குழந்தை பிறந்தது முதல் முறையான ஊட்டச்சத்து வழங்க வேண்டும் என்ற காரணத்தினால் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நீலகிரி மாவட்டத்தில்தான்



முதலில் துவக்கி வைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இதுபோன்ற எண்ணற்ற திட்டங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. இதனை பொதுமக்கள் பெற்று பயன்பெற வேண்டும் என மாண்புமிகு தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திரு.கௌசிக் இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஊராட்சித்தலைவர் திரு.பொன்தோஸ், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் திரு.தயாளன், துணைப் பதிவாளர் திரு.எஸ்.குமாரசுந்தரம், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி துணைப்பதிவாளர் / மேலாண்மை இயக்குநர் திருமதி.சித்ரா, கூடலூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.செந்தில்குமார், பொது விநியோகத்திட்ட துணைப்பதிவாளர் திரு.கமல்சேட், மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை துணைப்பதிவாளர் / செயலாட்சியர் திரு.சி.அய்யனார், கூட்டுறவு சார் பதிவாளர் / கள அலுவலர் (கூடலூர் வட்டாரம்) திரு.ரவிக்குமார், கூட்டுறவு சார் பதிவாளர் / மேலாண்மை இயக்குநர் (நீலகிரி மாவட்ட கூட்டுறவு ஒன்றியம்) திரு.கௌரிசங்கர், நகரமன்றத்தலைவர்கள் திருமதி.பரிமளா (கூடலூர்), திருமதி.சிவகாமி (நெல்லியாளம்), கூடலூர் நகராட்சி ஆணையாளர் செல்வி சுவேதாஸ்ரீ, கூடலூர் ஊராட்சி ஒன்றியத்தலைவர் திருமதி. கீர்த்தனா, ஓவேலி பேரூராட்சித்தலைவர் திருமதி.சித்ராதேவி, திட்டக்குழு உறுப்பினர் திரு.இராஜேந்திரன் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.


அமோக விளைச்சலை அள்ளித்தருமே

**கிரிப்கோ குருணை யூரியா**

UREA | BIO-FERTILISER | SEED




**கிரிஷக் பாரதி கோவாப்பரேட்டிவ் லிமிடெட்.,**

KRIBHCO
Cooperative and beyond...

அறை எண். 1, 2 & 3, ஆயத்த ஆடை வளாகம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.

<u>ஈரோடு மாவட்டம்</u>

## கூட்டுறவுத்துறையின் சார்பில் நடைபெற்ற 71 ஆவது அனைத்திந்தியக் கூட்டுறவு வாரவிழாவில்,

# 1193 நபர்களுக்கு ரூ.15.85 கோடி மதிப்பிலான கடனுதவிகள் மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகளை

## மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் வழங்கினார்.




ஈரோடு மாவட்டம், சித்தோடு அரசினர் பொறியியல் கல்லூரியில், 15.11.2024 அன்று கூட்டுறவுத்துறையின் சார்பில், "காலத்திற்கேற்ப கூட்டுறவில் புதிய முயற்சிகள், தொழில் நுட்பங்கள் மற்றும் சிறந்த நிர்வாகம்"" என்ற தலைப்பில் நடைபெற்ற மாவட்ட அளவிலான 71 ஆவது அனைத்திந்தியக் கூட்டுறவு வார விழாவில் 1193 பயனாளிகளுக்கு ரூ.15.85 கோடி மதிப்பிலான பல்வேறு கடனுதவிகளை மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.சு.முத்துசாமி அவர்கள் வழங்கினார்கள்.

இவ்விழாவில், ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர், திரு.ராஜ கோபால் சுன்கரா இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்றார். மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி விழாவில் பேருரையாற்றினார்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளின் மேம்பாட்டிற்காக எண்ணற்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். அதன் அடிப்படையில், இன்றைய தினம் 71 ஆவது அனைத்திந்தியக் கூட்டுறவு வார விழா "காலத்திற்கேற்ப கூட்டுறவில் புதிய முயற்சிகள், தொழில் நுட்பங்கள் மற்றும் சிறந்த நிர்வாகம்"" என்ற தலைப்பில் சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது. இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் முதன்முறையாக கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டது. 1904ஆம் ஆண்டு திருவள்ளூர் மாவட்டத்தில் துவக்கப்பட்டு, மிகப்பெரிய அளவில் வளர்ச்சியடைந்துள்ளது. மேலும், கூட்டுறவுச் சங்கங்கள் வேலைவாய்ப்பு உருவாக்குதல் மற்றும் தொழில்களை ஏற்படுத்துதல் ஆகியவற்றை முன்னெடுத்து செல்வதற்கு மிகப்பெரிய அளவில் உதவிகரமாக உள்ளது. ஈரோடு மாவட்டமானது 2023 –2024–இல் மாநிலத்திலேயே அதிகளவில் பயிர்க்கடன் வழங்கிய மாவட்டமாக திகழ்கிறது. இதில் ஏறத்தாழ ரூ.1069 கோடி கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. அதேபோல ரூ.1212 கோடி கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. எனவே இதுபோன்ற பல்வேறு திட்டங்கள் கூட்டுறவுத்துறையின் சார்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்தியாவிலேயே வேறெந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக பெண்கள் முன்னேற்றத்தில் மிகுந்த அக்கறை கொண்டு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், நகர பேருந்துகளில் மகளிருக்கு கட்டணமில்லா சலுகை, இல்லத்தரசிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை மூலம் மாதம் ரூ.1000/– வழங்கும் திட்டம், பெண் குழந்தைகள் கல்வியில் முன்னேற்றம் அடைவதற்கு அவர்கள் கல்லூரியில் சேர்ந்தவுடன் மாதம் ரூ.1000/– வழங்கும் புதுமைப்பெண் திட்டம், அதேபோல் மாணவர்களுக்கு தமிழ்ப்புதல்வன் திட்டம், அரசு பள்ளிகளில் 1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவு திட்டம் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுபோன்ற திட்டங்கள் மாணவ, மாணவியர்களின் எதிர்கால முன்னேற்றத்திற்கு ஏதுவாக அமைகின்றது. அதேபோல் ஈரோடு

மாவட்டத்திற்கென்றே மிகப்பெரிய அளவில் விளையாட்டு மைதானம், நூலகம் ஆகியவற்றை அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே பொதுமக்கள் தங்களுக்கு தேவையான திட்டங்கள் மற்றும் கோரிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோரிடம் மனுக்களாக வழங்கலாம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மக்கள் நல திட்டங்கள் அனைத்தையும் நிறைவேற்றுவதற்கு தயாராக உள்ளார்கள். அந்த வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க தாளவாடி மலைப்பகுதியில் பணியாற்றும் ஆசிரியர்கள், அரசு அலுவலர்களின் 40 ஆண்டு கால கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவர்களுக்கு மலைவாழ் படித்தொகை வழங்குவதற்கான உத்தரவு ஆணை வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

கூட்டுறவுத்துறையின் சார்பில், 15.11.2024 அன்று மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கிளை மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் அளவில் 1193 பயனாளிகளுக்கு ரூ.15.85 கோடி மதிப்பீட்டில் மகளிர் சுயஉதவிக்குழு கடன், மாற்றுத்திறனாளிகள் கடன், சிறுவணிக கடன், முத்ரா கடன், மத்திய கால கடன், பயிர்க்கடன், நடைமுறை மூலதன கடன், டாப்செட்கோ கடன், சம்பள கடன் உள்ளிட்ட பல்வேறு கடனுதவிகளை வழங்கினார்.

வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களின் புதிய கிளை அலுவலகங்கள், புதிய நியாயவிலை கட்டிடம், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களை நகர கூட்டுறவு கடன் சங்கங்களாக வகை மாற்றுதல், சிறு பல்பொருள் அங்காடி மற்றும் பண்மை பசுமை அங்காடிகள் திட்டம், சிறுதானியம் விற்பனை உள்ளிட்ட ரூ.82.00 இலட்சம் மதிப்பீட்டிலான 31 புதிய திட்டங்களை துவக்கி வைத்தார்.

71 ஆவது அனைத்திந்தியக் கூட்டுறவு வாரவிழாவினை முன்னிட்டு பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும், முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவ, மாணவியர்களுக்கு பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார். மேலும், ஈரோடு மாவட்ட அளவிலான சிறந்த கூட்டுறவுச் சங்கங்கள், சிறந்த தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், கைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள், வீட்டுவசதித்துறை சங்கங்கள், சமூகநலத்துறை தொழில் கூட்டுறவுச் சங்கம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சிறப்பாக செயல்படும் பணியாளர்களுக்கு தனிநபர் விருதுகளை வழங்கினார்.

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள் கூட்டுறவுத்துறை மற்றும் ஆவின் உள்ளிட்ட துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த அரங்கங்களை பார்வையிட்டார்.

இவ்விழாவின்போது, பாராளுமன்ற உறுப்பினர், திரு.கே.இ.பிரகாஷ், அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர், திரு.ஏ.ஜி.வெங்கடாச்சலம், மாண்புமிகு ஈரோடு மாநகராட்சி மேயர், திருமதி. நாகரத்தினம் சுப்ரமணியம், ஈரோடு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கூடுதல் பதிவாளர் / மேலாண்மை இயக்குநர், மரு.சு.செந்தமிழ்செல்வி, ஈரோடு மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை இணைப்பதிவாளர்/மேலாண்மை இயக்குநர், திரு.த.செல்வக்குமரன், துணை மேயர்,

திரு.வே.செல்வராஜ், மாவட்ட ஊராட்சி தலைவர், திருமதி.நவமணி கந்தசாமி, ஈரோடு ஊராட்சி ஒன்றிய தலைவர், திரு.சு.பிரகாஷ், வேளாண்மைத் துறை, வேளாண் இணை இயக்குநர், திரு.சு.வெங்கடேசன், கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் அலுவலக துணைப்பதிவாளர்/பணியாளர் அலுவலர், திரு.பா.ரவிச்சந்திரன், கோபி சரக கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளர், திரு.இரா.முத்து சிதம்பரம், துணைப்பதிவாளர் (பொது விநியோகத் திட்டம்), திரு.சு.மாதேஸ், ஈரோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்க துணைப்பதிவாளர்/ மேலாண்மை இயக்குநர், திரு.து.ரவிச்சந்திரன், ஈரோடு கூட்டுறவு நகர வங்கி, துணைப்பதிவாளர்/மேலாண்மை இயக்குநர், திருமதி.பி.ஜெயந்தி, கோபி செட்டிபாளையம் கூட்டுறவு நகர வங்கி, துணைப்பதிவாளர்/மேலாண்மை இயக்குநர், திரு.கா.ர.ஆ.விஜயகணபதி, துணைப்பதிவாளர் (பயிற்சி), திரு.ப.அஜித்குமார், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திரு.அ.சுகுமார், துணைப்பதிவாளர் (பால்வளம்) (முழுக்கூடுதல் பொறுப்பு), திரு. இரா.கணேஷ், பால் கூட்டுறவு தணிக்கைத்துறை, மண்டல துணை இயக்குநர், திரு.த.இராமகிருட்டிணன், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர், திரு.ஆர். எஸ்.ராம்குமார், மாவட்ட சமூக நல அலுவலர், திருமதி.சு.சண்முகவடிவு, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, உதவி இயக்குநர், திரு.சோ.கொளஞ்சிநாதன், ஈரோடு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, பொது மேலாளர், திரு.கி.கண்ணன், அரசினர் பொறியியல் கல்லூரி, முதல்வர், முனைவர் ஆ.சாரதா அவர்கள், ஈரோடு மாவட்ட கூட்டுறவு ஒன்றியம், கூட்டுறவு சார்பதிவாளர்/ செயலாட்சியர் திரு.மு.பா. பாலாஜி, ஈரோடு மாவட்ட கூட்டுறவு அச்சுக்கூடம், கூட்டுறவு சார்பதிவாளர்/ செயலாட்சியர், திருமதி.த.கிருத்திகா, அரசு உயர் அலுவலர்கள், இப்கோ மற்றும் கிரிப்கோ கள அலுவலர்கள், துறை சார்ந்த அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதி நிதிகள், கூட்டுறவாளர்கள், கூட்டுறவுச் சங்கங்கள்/வங்கிகளின் செயலாளர்கள், பணியாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

ஈரோடு மண்டல கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் திரு.க.ராஜ்குமார் வரவேற்புரையாற்றினார். இறுதியாக, ஈரோடு சரக கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளர் திருமதி.ஜி.காலிதா பானு நன்றியுரை கூறினார்.





## விருதுநகர் மாவட்டம்

# 71ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா கூட்டுறவு சங்கப் பணியாளர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கான கருத்தரங்கம் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் நடைபெற்றது.

விருதுநகர் மாவட்டம், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி வளாகத்தில் 16.11.2024 அன்று 71ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா கூட்டுறவு சங்கப் பணியாளர்கள் மற்றும் சுயஉதவிக்குழு மகளிர் உறுப்பினர்களுக்கான கருத்தரங்கம் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

கூட்டுறவு துறை என்பது ஏறத்தாழ 70 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. கடந்த பத்தாண்டுகளில் நவீன வங்கி துறை மாற்றங்களின் தொழில்நுட்பத்துறை மாற்றங்களை கூட்டுறவுத்துறை கையாண்டு ஒட்டுமொத்த பணம் கையாளக்கூடிய விகிதம் குறைந்து இருக்கிறது. இருந்தாலும், ஒவ்வொரு கிராமங்களிலும் குறிப்பாக விவசாய பெருமக்கள் அதிகமாக வாழக்கூடிய பகுதிகளில் கூட்டுறவு வங்கிகளின் உடைய செயல்பாடுகளின் தேவை அதிகமாக உள்ளது.

மேலும் இந்த துறையில் உள்ள பணியாளர்கள் தங்களின் பணிகளோடு, தங்களுடைய உடல் நலன் மற்றும் குடும்ப நலனை பேணுவதிலும் அக்கறையுடன் இருக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் 20 சதவிகிதம் நபர்களுக்கு நீரிழிவு மற்றும் இரத்த அழுத்தம் உள்ளிட்ட நோய்கள் காணப்படுகின்றன. 2030ல் உலகத்தில் சர்க்கரை நோயின் தலைநகரமாக இந்தியா மாறும் என ஆய்வுகள் தெரிவிக்கிறது. எனவே, ஒவ்வொரு பணியாளர்களும் தங்களுடைய தனிப்பட்ட



தொழில்நுட்பத்தின் துணை இல்லாமல் இன்றைய கால கட்டத்தில் எதுவும் செய்ய இயலாது. இன்னும் 30 ஆண்டுகள் இந்த துறையில் இருந்து வேலை செய்பவர்கள் நிச்சயமாக இதனை புரிந்து கொள்ள வேண்டும். இல்லையென்றால் இந்த துறையினுடைய வளர்ச்சியை அடுத்த கட்டத்திற்கு எடுத்து செய்ய இயலாது.

அது கூட்டுறவுச் சங்கத்தின் உடைய சேவையாக இருந்தாலும், சங்கத்தின் உடைய பணியாளர்கள் அல்லது கூட்டுறவுத் துறையினுடைய பணியாளர்கள் யாராக இருந்தாலும் நவீன தொழில்நுட்ப உதவிகளோடு, வங்கி சேவையை மேம்படுத்துவது என்பது மிக மிக அவசியம். தனிப்பட்ட ஒரு அலுவலரின் செயல்பாட்டிற்கும் அது உதவி செய்யும். வங்கிகள் சங்கங்களின்செயல்பாட்டிற்கும் உதவி செய்கின்றன. இதனை எல்லாம் புரிந்து கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வது தான் இந்த கூட்டுறவு வார விழா கொண்டாடுவதற்கான தேவையாக இருக்கிறது.

உடல் நலனையும், குடும்பத்தினருடைய உடல் நலனையும் பேணிக்கொள்வது இந்த வார விழாவின் ஒரு கருத்தாக இருக்க வேண்டும்.

மேலும், ஒரு வங்கி நுகர்வோராக இன்று கூட்டுறவுத் துறையில் நாம் எதிர்க்கொள்ளக் கூடிய சிக்கல்கள் அதற்கு நவீன தொழில்நுட்பம் எத்தகைய தீர்வுகளை தருகிறது. தீர்வுகளை எல்லாம் எதிர் கொள்ளக்கூடிய அளவிற்கு இருக்கின்றனவா என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு நவீன தொழில்நுட்பமும் குறிப்பாக சமீபத்தில் மிகப்பெரிய அளவில் பங்கு வகிக்கக்கூடிய செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பமானது இன்று வங்கிகளின் அன்றாடம் நீங்கள் உங்களுடைய நேரத்தை எதற்காக வங்கியில் செலவழிக்கிறீர்களோ அவற்றை எல்லாம் செய்வதற்கு செயற்கை தொழில்நுட்பங்களின் உதவி உங்களின் நேரத்தை எளிதாக்குகிறது.



செயற்கை தொழில்நுட்பத்தில் இருந்து ஒரு தனிமனித ஆற்றல் வெளிப்படுகிறது. செயற்கை நுண்ணறிவு

மாவட்டத்தில், பெரும் பான்மையான கிராமப்புறங்களில் 5 கி.மீ இடைவேளையில் வங்கி சேவைகள் இருந்தும் உரிய நேரத்தில் வங்கி சேவைகள் கிடைக்க பெறாததால், ஏழை எளிய மக்கள் தனியார் நிதி நிறுவனங்கள் மூலம் கடன் பெற்று பல இன்னல்களை அனுபவித்து வருகின்றனர் எனவும், இந்த நிலை மாற கூட்டுறவு நிறுவனங்கள் கிராம புறங்களில் வசிக்கும் மக்களின் பணத்தேவைகளை பூர்த்தி செய்ய தங்களிடம் வரப்பெறும் கடன் மனுக்களை உரிய காலத்தில் பரிசீலித்து கடன் வழங்கிட வேண்டும். மேலும், மகளிர் உதவிக்குழுக்களுக்கு அதிகளவு கடன் வழங்கி ஏழை, எளிய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திட கூட்டுறவு நிறுவனங்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அனைவருக்கும் உரிய நேரத்தில் வங்கி சேவை சென்றடைய செய்யும் வழிகளை கண்டறிந்து அதனை நிறைவேற்றிட வேண்டும். எனவே, இந்த கூட்டுறவுத்துறையின் மூலமாக நாம் சேவையை தரமான சேவையாக உரிய நேரத்தில் அளிக்க வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்நிகழ்ச்சியில், கூட்டுறவுத்துறை அலுவலர்கள் மற்றும் சங்கப் பணியாளர்கள் அனைவரும் 71 ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் எடுத்துக்கொண்டனர்.

இக்கருத்தரங்கில், உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.ஹிமான்சு மங்கள், இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் திரு.பா. செந்தில் குமார், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் இணைப்பதி வாளர்/செயலாட்சியர் திருமதி பெ.இராஜலெட்சுமி, துணைப்பதி வாளர்கள், கூட்டுறவு வங்கிப் பணியா ளர்கள், சங்கப் பணியாளர்கள், மகளிர் சுய உதவிக்குழு பெண்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




**நாகப்பட்டினம் மாவட்டம் 71ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவின் முதல் நாளாக காடம்பாடி கிளையில் கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கியில் 14.11.2024 அன்று கொடியேற்றி கொண்டாடப்பட்டது**




**14.11.2024 அன்று 71வது அனைத்திந்திய கூட்டுறவு வாரவிழாவை முன்னிட்டு பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் ஒன்றியம் கூத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் பெரம்பலூர் மண்டல இணைப்பதிவாளர் திரு.க.பாண்டியன், கூட்டுறவு கொடியினையேற்றி மரக்கன்றுகளை நட்டு வைத்தார். இந்நிகழ்வில், சரக துணைப்பதிவாளர் திருமதி.அ.இளஞ்செல்வி, பெரம்பலூர் பொது விநியோகத் திட்ட துணைப்பதிவாளர் திரு.ப.சிவகுமார், பெரம்பலூர் மண்டல இணைப்பதிவாளர் அலுவலக கண்காணிப்பாளர் திரு.இரா.சோ.ரமேஷ் பெரம்பலூர் மாவட் கூட்டுறவு ஒன்றியத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. த.கௌசீகன், திருச்சி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் களமேலாளர் திரு.ச.எட்வின் கிளார், மத்திய கூட்டுறவு வங்கியின் மேற்பார்வையாளர் திரு.சி.இராமலிங்கம், சங்க செயலாளர் ஆறுமுகம் மற்றும் சங்கப்பணியாளர்கள், சுயஉதவி குழு உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துக்கொண்டனர்.**



**சகோதரர்களாக இணைந்து
வாழ கற்றுக்கொள்ள வேண்டும்,
இல்லையேல் முட்டாள்களாக
அழிந்து போவோம்.**

– ஜவஹர்லால் நேரு

கூட்டுறவு இதழுக்கு எழுத்தோவியங்களை அனுப்புவோர் அஞ்சல் / மின்னஞ்சல் மூலம் அனுப்ப வேண்டும். வெளியிடப்படாத எழுத்தோவியங்களைத் திரும்ப அனுப்ப இயலாது.

கூட்டுறவு இதழில் வெளிவரும் கட்டுரைகள், கவிதைகள், நாடகங்கள் மற்றும் துணுக்குகளில் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் எழுதுபவரின் கருத்தாகும்.

– ஆசிரியர்

Printed at Central Cooperative Printing Works Limited, 83/95 Anna Salai, Chennai - 600 002 and Published on behalf of Tamilnadu Cooperative Union from 170, Periyar E.V.R. High Road, Kilpauk, Chennai - 600 010. Editor: S.Subramanian, Additional Registrar / Managing Director (Incharge), Tamilnadu Cooperative Union from 170, Periyar E.V.R. High Road, Kilpauk, Chennai-600 010.